

# சண்டை சச்சரவுகள் இல்லாமல் வாழ்தல்

ஆசிஷ் ராய்ச்சூர்

**இந்தப் புத்தகம் இலவசமாக மட்டுமே விநியோகிக்கப்பட வேண்டும்**

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட்ரீச் ஊழியத்தால் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது, இந்தியா, பெங்களூர்.

தற்போதைய பதிப்பு: 2024

**தகவல் தொடர்புக்கு**

All Peoples Church & World Outreach,
# 319, 2nd floor, 7th main, HRBR layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore - 560 043,
Karnataka, INDIA.

**தொலைபேசி:** +91-80-25452617
**மின்னஞ்சல்: bookrequest@apcwo.org**
**இணையதளம்: apcwo.org**

மேற்கோள் குறிப்பிடப்படாத, அனைத்து வேதாகம மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து (BSI), தமிழ் பழைய பதிப்பு - நியூ ஆர்த்தோ) எடுக்கப்பட்டு, பைபிள் சொசைட்டி ஆப் இந்தியா மூலமாக வெளியிடப்பட்டது. அனுமதியோடு பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**நிதி பங்குதாரர்கள்**

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் உறுப்பினர்கள், பங்குதாரர்கள் மற்றும் நண்பர்களின் நிதியுதவியின் மூலம் இந்த வெளியீட்டை இலவசமாக விநியோகிப்பது சாத்தியமாகிறது. இந்த இலவச வெளியீட்டின் மூலம் நீங்கள் பலனடைந்திருந்தால், ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சிலிருந்து இலவச வெளியீடுகளை அச்சடித்து விநியோகிக்க உதவும்படி நிதியுதவி அளிக்க உங்களை ஊக்குவிக்கிறோம். தயவுசெய்து **apcwo.org/give** என்ற வலைதளத்திற்குச் சென்று பார்க்கவும் அல்லது உங்கள் பங்களிப்பை எவ்வாறு வழங்குவது என்பதைப் பற்றி இந்தப் புத்தகத்தின் பின்புறத்தில் எழுதப்பட்டுள்ள “ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பங்காளராய் இருத்தல்” என்ற பக்கத்தைப் பார்க்கவும். நன்றி!

**இலவச பயன்பாடுகள் மற்றும் தொடர்புடைய இணையதளங்கள்**

**பிரசங்கங்கள்:** apcwo.org/sermons | **புத்தகங்கள்:** apcwo.org/books
**திருச்சபை செயலி:** apcwo.org/app | **வேதாகமக் கல்லூரி:** apcbiblecollege.org
**மின்வழி கற்றல்:** apcbiblecollege.org/elearn | **ஆலோசனை:** chrysalislife.org
**இசை:** apcmusic.org | **ஊழியர்கள் ஐக்கியம்:** pamfi.org
**ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேர்ல்டு அவுட்ரீச்:** apcworldmissions.org

(Tamil — Living Life Without Strife)

# சண்டை சச்சரவுகள் இல்லாமல் வாழ்தல்

# பொருளடக்கம்


1. சண்டை சச்சரவுகள் என்றால் என்ன? 1
2. சண்டை சச்சரவுகள் வரக்காரணம் என்ன? 3
3. சண்டை சச்சரவுகளின் எதிர் விளைவுகள் 18
4. சண்டை சச்சரவுகளை உன் வாழ்விலிருந்து விலக்குதல் 20

# 1

# சண்டை சச்சரவுகள் என்றால் என்ன?

குடும்பத்திலும், வேலை செய்கிற இடங்களிலும், ஊழியத்திலும், சபையிலும் மற்றும் எல்லா இடங்களிலும் சண்டை சச்சரவுகளோடான வாழ்க்கை உறவுகளை நாசம்பண்ணுகிறது. புற்றுநோய் பரவுவதுபோல, எல்லா இடங்களிலும் சண்டை சச்சரவுகள் பரவி, சண்டை சச்சரவுகள் இல்லாத இடமே இல்லை என்ற நிலை காணப்படுகிறது. அப்படியானால், சண்டை சச்சரவுகள் என்றால் என்ன? சண்டை சச்சரவுகள் என்பது மக்களுக்கிடையே ஏற்படும் பிரிவினைகள், வெறுப்புக்கள், பகை விரோதங்கள் மற்றும் போராட்டங்களாகும்.

வீட்டிலே கணவன், மனைவியிடையே பிரச்சனைகள், பெற்றோர்கள் பிள்ளைகளிடையே பிரச்சனைகள், அக்கா, தங்கை, அண்ணன், தம்பிகளிடையே பிரச்சனைகள் நிலவுகின்றன. நாம் சிறு பிள்ளைகளாக இருந்தபொழுது பொம்மைகளுக்காகச் சண்டை போட்டிருக்கலாம்; வளர்ந்த பின்பு பணத்திற்காகவும், நிலங்களுக்காகவும் சண்டை போட்டிருக்கலாம். மேலும், வேலைக்குப்போகும் இடத்தில், நம்மோடு சேர்ந்து வேலை செய்கிறவர்களோடு சண்டைகள், முதலாளிக்கும் தொழிலாளிகளுக்குமிடையேயான சண்டைகள் மற்றும் உயர் அதிகாரிகளுக்கிடையேயான சண்டைகள் போன்றவை காணப்படுகின்றன. துரதிர்ஷ்டவசமாக, திருச்சபையிலும் சண்டை சச்சரவுகள் காணப்படுகின்றன. ஒரே திருச்சபை மக்களுக்கிடையே கூடப் பிரச்சனைகள் உள்ளன. அனைவரும் ஒன்று சேர்ந்து 'அல்லேலுயா! அல்லேலூயா!' என்று ஞாயிறு

ஆராதனையில் பாடினால்கூட, மற்ற விசுவாசிகளோடு சேர்ந்து பயணிக்கமுடியாத அளவு மற்றவர்களோடு ஒத்துப்போக முடியாமல் பிரச்சனைகள் இருக்கலாம். இதைச் சொல்வது வருத்தமளிக்கும் என்றாலும்கூட, சொல்லாமல் இருக்க முடியாது. அது என்னவென்றால், ஆண்டவருக்கு ஊழியம் செய்கிறேன் என்று சொல்லுகிறவர்களுக்கு இடையேகூட ஒத்துப்போகமுடியாமல், பல சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன!

ஆகவே, இந்தப் புத்தகத்தை எழுதுவதன் நோக்கம்:

- இதுபோன்ற சண்டை சச்சரவுகளுக்கு எது காரணமாக இருக்கிறது என்று புரிந்துகொள்ளுதல்,
- நாம் சண்டை சச்சரவுகளோடு வாழ்வதால் நம் வாழ்வில் ஏற்படும் எதிர்மறைத் தாக்கங்களைக் கண்டறிதல்,
- நம் வாழ்வில் சண்டை சச்சரவுகளைத் தவிர்த்து வாழ்வதற்கான வழிமுறைகளைக் கற்றுக்கொள்ளுதல்.

# 2

# சண்டை சச்சரவுகள் வரக்காரணம் என்ன?

## பகை

**நீதிமொழிகள் 10:12**
**பகை விரோதங்களை எழுப்பும்; அன்போ சகல பாவங்களையும் மூடும்.**

பகை சண்டை சச்சரவுகளை உருவாக்கும். உதாரணத்திற்கு, நீங்கள் புதிதாக ஒரு இடத்தில் வேலைக்குச் சேர்கிறீர்கள். உங்களோடு சேர்ந்து பணிபுரியப்போகும் குழுவினருக்கு நீங்கள் அறிமுகப்படுத்தப்படுகிறீர்கள். அன்றைக்கு நீங்கள் மிகவும் சந்தோசமாக இருந்திருப்பீர்கள். பின்பு, நாட்கள் கடந்து செல்கையில், அந்தக் குழுவில் உள்ள ஒருவரோடு உங்களுக்கு ஒத்துப்போக முடியாதபடி பிரச்சனைகள் ஆரம்பிக்கிறது. ஆரம்பத்தில் அவரோடு நீங்கள் சந்தோசமாக இருந்திருப்பீர்கள்; ஆனால், அதற்குப் பின் வந்த நாட்களில் அவரைப் பிடிக்காமல் போகலாம். பின்பு, அவரை நீங்கள் தவிர்க்க ஆரம்பிப்பீர்கள்; அவரை வெறுக்கவும் ஆரம்பிப்பீர்கள். அந்தப் பகை வளர்ந்து, ஒருநாள் அவரிடம் நீங்கள் சண்டையில், அந்த வெறுப்பை வெளிக்காட்டுவீர்கள். ஆனால், உங்களுக்கு அவர்மீது இவ்வளவு வெறுப்பு இருக்கிறது என்பது அந்த நபருக்கு அன்றுதான் புரியவரும். இவ்வாறாக, ஒருவர் மீது வைக்கும் பகையும், வெறுப்பும், பிரச்சனைகளையும் சண்டை சச்சரவுகளையும் கொண்டு வருகிறது.

## கோபம் அல்லது ஆத்திரம்

**நீதிமொழிகள் 15:18**
**கோபக்காரன் சண்டையை எழுப்புகிறான்; நீடியசாந்தமுள்ளவனோ சண்டையை அமர்த்துகிறான்.**

நாம் அனைவருக்குமே கோபம் வருவது இயற்கை. நமக்குள் ஏற்படும் கோபம் போன்ற உணர்வுகளை சரியான வழியில் வெளிப்படுத்த நாம் கற்றுக்கொள்ள வேண்டும். எப்படியெனில், நாம் பாவம், அநீதி மற்றும் சகிப்புத் தன்மையின்மை ஆகியவற்றைக் காணும்போது கோபப்படுவதில் தவறில்லை. ஆனால், ஏதோ ஒருசில சிறிய காரணங்களுக்காக, சாதாரணமாகப் பேசியதற்குக்கூட ஒருசிலர் ஆக்ரோஷமாகக் கோபப்படுவதை கவனித்திருப்பீர்கள். இவ்வாறாக, உணர்வுகளைக் கட்டுப்பாட்டில் வைக்கப் பழக்கமில்லாததால், அது அநேகரிடத்தில் பிரச்சனைகள், சண்டை சச்சரவுகள் உருவாகக் காரணமாக அமைகிறது. இவ்வாறாக, நமது கோபம், நாம் நினைத்துப் பார்க்காத அளவில் சண்டை சச்சரவுகளை உருவாக்கி, உறவுகளுக்கிடையே பிரச்சனைகளை வளர்த்திருக்கிறது.

**நீதிமொழிகள் 29:22**
**கோபக்காரன் வழக்கைக் கொளுவுகிறான்; மூர்க்கன் பெரும்பாதகன்.**

**நீதிமொழிகள் 30:33**
**பாலைக் கடைதல் வெண்ணெயைப் பிறப்பிக்கும்; மூக்கைப் பிசைதல் இரத்தத்தைப் பிறப்பிக்கும்; அப்படியே கோபத்தைக் கிண்டிவிடுதல் சண்டையைப் பிறப்பிக்கும்.**

நீதிமொழிகள் 30:33 ஐ எபிரேய மொழியில் இருப்பதுபோலவே மொழிபெயர்த்தால், *“பாலில் கொடுக்கப்படும் அழுத்தம், தயிரை உண்டாக்குகிறது; மூக்கில் கொடுக்கப்படும் அழுத்தம், ரத்தத்தை வரவழைக்கிறது; கோபத்தின் அழுத்தம், அதாவது,*

*கோபத்தை (கட்டுப்படுத்தப் பழகாமல்) அடக்குவதால் ஏற்படும் அழுத்தம் சண்டைகளுக்குக் காரணமாகிறது."* என்று அர்த்தம் தருகிறது.

## புறணி பேசுதல், முதுகுக்குப் பின் பேசுதல், கதைகட்டிப் பேசுதல்

**நீதிமொழிகள் 26:20**

**விறகில்லாமல் நெருப்பு அவியும்; கோள்சொல்லுகிறவனில்லாமல் சண்டை அடங்கும்.**

கதைகட்டிப் பேசுகிறவர்கள், புறணி பேசுகிறவர்கள், கிசுகிசுப்பவர்கள், மற்றவர்களைப் பற்றி அவதூறாகப் பேசுகிறவர்கள் பிரச்சனைகளுக்குக் காரணமாக இருக்கிறார்கள். உதாரணத்திற்கு, இரு நண்பர்களைப் பற்றிப் பார்க்கலாம். அவர்கள் இருவரும் நல்ல நண்பர்களாக இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் விடுமுறைக்குச் சென்றுவிடுகிறார். ஒரு புதிய நபர் அவருடைய நண்பரைப் பற்றி அவதூறானவைகளைப் பேசுகிறார். விடுமுறைக்குப் போய்த் திரும்பிய நண்பர், தன்னுடைய நண்பரை மீண்டும் சந்திக்கும்பொழுது, அவர் மிகவும் வித்தியாசமாகப் பழகுவதைக் கவனிக்கிறார். ஏனெனில், அவர்களுக்கு இடையே, புறணிபேசுகிற ஒருவர் இப்பொழுது நுழைந்திருப்பதாலேயே அப்படி நடக்கிறது. இதுபோன்று, நாம் புறணி பேசுகிறோம் என்ற உணர்வு இல்லாமலேயே, இன்னொருவரைப் பற்றி அவதூறாக மற்றவர்களிடம் பேசும்பொழுது, அவர்கள் இருவருக்கும் இடையே பிரச்சனைகள் முளைத்தெழும்ப நாமே காரணமாக அமைகிறோம். ஆகவே, மற்றவர்களைப் பற்றி, இன்னொருவரிடம் நாம் பேசும்பொழுது, மிகவும் கவனமாகப் பேச வேண்டும்.

**நீதிமொழிகள் 16:28**

**மாறுபாடுள்ளவன் சண்டையைக் கிளப்பிவிடுகிறான்; கோள்**

**சொல்லுகிறவன் பிராண சிநேகிதரையும் பிரித்துவிடுகிறான்.**

## சர்ச்சைக்குரிய நபராகவும் சண்டையிடுபவராகவும் இருத்தல்

**நீதிமொழிகள் 26:21**
**கரிகள் தழலுக்கும், விறகு நெருப்புக்கும் ஏதுவானதுபோல, வாதுப்பிரியன் சண்டைகளை மூட்டுகிறதற்கு ஏதுவானவன்.**

சண்டைக்காரர்களிடம் நாம் என்ன சொன்னாலும், என்ன செய்தாலும் கோபப்படுவார்கள். இது அவர்களுடைய குணத்திலேயே அமையப்பெற்ற ஒன்றாக இருக்கும். என்ன பேசினாலும், என்ன செய்தாலும், கோபத்தில் சண்டைபோட்டு, பலரோடும் உறவுகள் முறிந்துபோகக் காரணமாக இருப்பார்கள். இதில், மற்றவர்கள் குற்றம் செய்தார்கள் என்பதினால் அல்ல, இவருக்குள் உள்ள இந்த சண்டைபோடும் குணமே, பல பிரச்சனைகளுக்குக் காரணமாக அமையும்.

## பெருமை

**நீதிமொழிகள் 28:25**
**பெருநெஞ்சன் வழக்கைக் கொளுவுகிறான்; கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான்.**

ஒரு வேலையை எப்படிச் செய்து முடிக்கவேண்டும் என்று ஒரு குழுவாக ஒரு அறையில் அமர்ந்து கலந்துரையாடும் நிகழ்வைக் கருத்தில் கொள்ளலாம். நீங்களும் அந்தக் குழுவில் ஒருவராக இருக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். உங்கள் குழுத்தலைவர் உங்களைப்போல ஒரு சிறப்பான பல்கலைக்கழகத்தில் பட்டம்பெறாத ஒரு நபராக இருக்கிறார். அந்த வேலையை முடிக்க, உங்களுடைய ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளாமல், அவருடைய ஆலோசனைகளின்படி அதைச் செய்துமுடிக்கத் தீர்மானிக்கிறார். ஆனால், அவரைவிட என்னால் அந்த வேலையை நன்றாகச்

செய்யமுடியும் என்று நீங்கள் நினைப்பதால், அவருடைய அதிகாரத்திற்கு உங்களால் கட்டுப்பட்டு நடக்க முடியாமல் போகிறது. இது சண்டை சச்சரவுகளுக்குக் காரணமாக அமைகிறது. இவ்வாறாக, மற்றவர்களுடைய ஆலோசனைகளையும் வழிமுறைகளையும் ஏற்றுக்கொள்ள முடியாமல், என் வழிதான் சிறப்பானது, என் ஆலோசனைதான் சிறப்பானது என்ற பெருமையான எண்ணம், நம்மில் அநேக உறவுகளுக்கிடையே பிரச்சனைகள் மற்றும் சண்டைகளுக்குக் காரணமாக அமைகிறது.

## சுயநல ஆசைகள்

லூக்கா **22:20-27**

**[20] போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்.**
**[21] பின்பு: இதோ, என்னைக் காட்டிக்கொடுக்கிறவனுடைய கை என்னுடனேகூடப் பந்தியிலிருக்கிறது.**
**[22] தீர்மானிக்கப்பட்டபடியே மனுஷகுமாரன் போகிறார், ஆனாலும் அவரைக் காட்டிக்கொடுக்கிற மனுஷனுக்கு ஐயோ என்றார்.**
**[23] அப்பொழுது அவர்கள் நம்மில் யார் அப்படிச் செய்வான் என்று தங்களுக்குள்ளே விசாரிக்கத் தொடங்கினார்கள்.**
**[24] அன்றியும் தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று.**
**[25] அவர் அவர்களை நோக்கி: புறஜாதியாரின் ராஜாக்கள் அவர்களை ஆளுகிறார்கள்; அவர்கள்மேல் அதிகாரம் செலுத்துகிறவர்களும் உபகாரிகள் என்னப்படுகிறார்கள்.**
**[26] உங்களுக்குள்ளே அப்படியிருக்கக்கூடாது; உங்களில் பெரியவன் சிறியவனைப்போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப்போலவும் இருக்கக்கடவன்.**
**[27] பந்தியிருக்கிறவனோ, பணிவிடைசெய்கிறவனோ, எவன் பெரியவன்? பந்தியிருக்கிறவன் அல்லவா? அப்படியிருந்தும், நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன்.**

தன்னுடைய சிலுவை மரணத்திற்கு முன்பு, கடைசி இரவு உணவை இயேசு தன் சீஷர்களோடு சாப்பிடத்

தீர்மானிக்கிறார். அப்பொழுது, இயேசு தான் சிலுவையில் மரிக்கப்போவதையும், அவர்களிடமிருந்து விடைபெறப் போவதையும் தெரிவிக்கிறார். தான் அவ்வாறு போகப்போவதைச் சொல்லக் கேட்ட சீஷர்களின் மனநிலை எப்படியிருந்தது என்று கவனியுங்கள். அவ்வாறு இயேசு போனபின்பு, அவருடைய தலைமைப் பொறுப்பு அடுத்து யாருக்கு என்பதே அவர்களுடைய பேச்சாக இருந்தது. இந்த சீஷர்கள் அனைவருமே, இயேசு பிரசங்கித்தவைகளைக் கேட்டவர்களும், அவருடைய போதனைகளைக் கவனித்தவர்களும், அவர் செய்த அதிசய அற்புதங்களைப் பார்த்தவர்களுமாய் இருந்தாலும், அவர்களுடைய இந்தப் போட்டி மனப்பான்மை சண்டைகளுக்குக் காரணமாக இருந்தது.

அப்பொழுது, யார் பெரியவர் என்று இயேசு அவர்களுக்குப் போதித்தவைகளைக் கவனியுங்கள். இயேசு அவர்களிடம், நீங்கள் அனைவருமே தவறாகப் புரிந்துகொண்டீர்கள். நீங்கள் இந்த உலக நடைமுறைகளைக் கவனித்து, அதைப்போலவே, நீங்களும் செயல்படத் தீர்மானித்திருக்கிறீர்கள் என்கிறார். மேலும், இயேசு அவர்களிடம், உயர் பதவியில் இருப்பவரை, இந்த உலகமக்கள் வேண்டுமானால் உயர்ந்தவராகக் கருதலாம். தேவனுடைய பார்வையில் அவர் தலைவர் என்று கருதப்பட வேண்டுமானால், அவர் மற்றவர்களுக்குச் சேவை செய்கிறவராக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். ஆகவே, உங்களில் யார் மற்ற அனைவருக்கும் வேலைக்காரராக இருக்க விரும்புகிறீர்களோ, அவரே உங்களுக்கு அடுத்த தலைவராக இருக்கும் தகுதியைப் பெறுகிறார் என்கிறார். இவ்வாறாக, சுயநலமான ஆசைகள் பிரச்சனைகளுக்குக் காரணமாக அமையலாம்.

## தவறான புரிந்துகொள்ளுதல்

**அப்போஸ்தலர்கள் 6:1**

**அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகினபோது, கிரேக்கரானவர்கள், தங்கள் விதவைகள் அன்றாடக விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று, எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள்.**

முதன்முதலாக எருசலேம் நகரில் துவங்கப்பட்ட திருச்சபையில் பிரச்சனைகள் இருந்தன. அவர்களுக்குள் கிரேக்க மொழிபேசும் யூதர்கள், எபிரேய மொழிபேசும் யூதர்கள் என்ற பிரிவு ஏற்படுகிறது. உணவுகளைப் பகிர்ந்துகொடுக்கும்பொழுது, எபிரேய மொழிபேசும் யூத விதவைகளுக்குக் கொடுப்பதுபோல, கிரேக்க மொழிபேசும் யூத விதவைகளுக்குக் கொடுப்பதில்லை என்ற குற்றச்சாட்டு எழும்புகிறது. இந்தப் பிரச்சனையை அப்போஸ்தலர்களிடம் சொல்லி, இதற்குத் தீர்வு என்ன என்று கேட்கிறார்கள். ஒரு கூட்டத்தினர், மற்ற கூட்டத்தினர்களைக் கவனிப்பதுபோல எங்களைக் கவனிக்கவில்லை என்ற தவறான புரிந்துகொள்ளுதலே அங்கு சர்ச்சைக்குக் காரணமாக இருந்தது.

## தனிநபர் குணங்களில் உள்ள வித்தியாசங்கள்

**அப்போஸ்தலர்கள் 15:36-41**

**36 சிலநாளைக்குப்பின்பு பவுல் பர்னபாவை நோக்கி: நாம் கர்த்தருடைய வசனத்தை அறிவித்திருக்கிற சகல பட்டணங்களிலுமுள்ள சகோதரர்கள் எப்படியிருக்கிறார்களென்று போய்ப் பார்ப்போம் வாரும் என்றான்.**
**37 அப்பொழுது பர்னபா என்பவன் மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானைக்கூட அழைத்துக்கொண்டு போகவேண்டும் என்றான்.**
**38 பவுலோ: அவன் பம்பிலியா நாட்டிலே நம்மை விட்டுப் பிரிந்து நம்மோடேகூட ஊழியத்துக்கு வராததினாலே, அவனை அழைத்துக்கொண்டு போகக்கூடாது என்றான்.**
**39 இதைப்பற்றி அவர்களுக்குள்ளே கடுங்கோபமூண்டபடியினால் அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தார்கள். பர்னபா**

**மாற்குவைக் கூட்டிக்கொண்டு கப்பல் ஏறிச் சீப்புருதீவுக்குப் போனான்.**
**40 பவுலோ சீலாவைத் தெரிந்துகொண்டு, சகோதரராலே தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு, புறப்பட்டு,**
**41 சீரியாவிலும் சிலிசியாவிலும் திரிந்து, சபைகளைத் திடப்படுத்தினான்.**

**2 தீமோத்தேயு 4:11**
**லூக்காமாத்திரம் என்னோடே இருக்கிறான். மாற்குவை உன்னோடே கூட்டிக்கொண்டுவா; ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன்.**

நாம் அனைவருமே தனித்தனி குணநலன்களை உடையவர்களாக இருப்பதாலும், ஒவ்வொரு செயல்களையும் தனித்துவத்தோடு செய்வதாலும், நம்மிடையே பிரச்சனைகள் எழும்பக் கூடும். அப்போஸ்தலர்களான பவுல் மற்றும் பர்னபாவுக்கு இடையே ஏற்பட்ட பிரச்சனைகளுக்கு அதுதான் காரணம் (அப்போஸ்தலர்கள் 15:36-41). அவர்கள் தங்களுடைய முதலாவது ஊழிய பயணத்தின்போது, பர்னபாவுக்குச் சொந்தக்காரரான யோவான் மாற்கு என்பவரை தங்களோடு அழைத்துச் செல்கிறார்கள். இந்த யோவான் மாற்கு என்பவருடைய குடும்பம் ஒரு செல்வச்செழிப்பான குடும்பமாகும். (அப்போஸ்தலர்கள் 12:12ல், இந்த யோவான் மாற்குவின் அம்மாவுடைய வீடு பெரிய வீடாக இருந்தபடியால், ஆதித்திருச்சபை மக்கள் அங்கு கூடி ஜெபித்ததாக அறிகிறோம்). ஆகவே, அவ்வளவு வசதியாக வாழ்ந்தவர், பவுல் மற்றும் பர்னபாவுடன் கப்பல் பயணத்திலும், கழுதைச் சவாரியிலும் கஷ்டப்பட்டு சென்றதால், ஒருவேளை, நமக்கு இந்த வேலை ஒத்துவராது என்று நினைத்து, பாதியிலேயே வீடு திரும்பியிருக்கலாம். ஆனால், பவுல் அதை மறக்காமல் நினைவில் வைத்திருக்கிறார். ஆகவேதான், பவுலும் பர்னபாவும் தங்கள் ஊழியங்களுக்காக இரண்டாவது முறை பயணம் செய்ய ஆயத்தமானபொழுது, பர்னபா யோவான் மாற்குவைக் கூட்டிச்செல்ல விரும்புகிறார். ஆனால், பவுலோ, அவன்

கடந்த முறை நம்மிடமிருந்து இடையில் கழன்றுகொண்டு போனவன்தானே என்று குமுறுகிறார்.

பர்னபாவோ மனதுருக்கமும் இரக்க குணமும் உள்ளவராய் இருந்தார். ஆகவே, ஒருவருக்கு இன்னொரு வாய்ப்புக்கொடுக்க வேண்டும் என்று விரும்பினார். ஆனால், பவுல் அதை ஏற்க மறுத்துவிட்டார். இவ்வாறாக, இருவருக்கிடையேயான தனிப்பட்ட குணநலன்கள் பிரச்சனைகளுக்குக் காரணமாக அமைந்தது. ஆனால், பவுல் முதிர்ச்சி அடைந்து, சாதுவான குணங்களைப் பெற்ற பின்பு, தீமோத்தேயுவிடம், *"மாற்குவை உன்னோடே கூட்டிக்கொண்டுவா; ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன்"* என்று 2 தீமோத்தேயு 4:11ல் எழுதுகிறார். அந்தக் காலகட்டத்தில், யோவான் மாற்குவும் ஆவிக்குரிய வாழ்வில் ஒரு முதிர்ச்சியை அடைந்திருக்கிறார்.

## பிரிவுகள் மற்றும் குழுக்கள்

**1 கொரிந்தியர் 3:3-5**

**3 பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா?**

**4 ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், வேறொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நீங்கள் மாம்சத்திற்குரியவர்களல்லவா?**

**5பவுல் யார்? அப்பொல்லோ யார்? கர்த்தர் அவனவனுக்கு அருள் அளித்தபடியே நீங்கள் விசுவாசிக்கிறதற்கு ஏதுவாயிருந்த ஊழியக்காரர்தானே.**

கொரிந்து நகரில் இருந்த திருச்சபை மக்களிடையே பிரிவினைகள் காணப்பட்டன. அவர்களிடையே ஒரு கூட்ட மக்கள், நாங்கள் 'பவுலைச் சேர்ந்தவர்கள்' என்றும், இன்னொரு கூட்ட மக்கள், 'நாங்கள் அப்பொல்லோவைச் சேர்ந்தவர்கள்' என்றும் சொல்லிக்கொண்டார்கள். ஆகவே, அங்கிருந்த ஒரு கூட்ட மக்கள், பவுலைப்

பெருமையாகப் பேசினார்கள். இன்னொரு கூட்ட மக்கள், அப்பொல்லோவைப் பற்றிப் பெருமையாகப் பேசினார்கள். அந்தத் திருச்சபை உருவாக பவுலை ஆண்டவர் பயன்படுத்தினார். ஆனால், நாளடைவில் அந்தத் திருச்சபையில் பிரிவினைகள் ஏற்பட்டு சண்டைகள் மற்றும் பிரிவினைகள் காணப்பட்டன.

ஆனால், பவுல், "நீங்கள் மாம்சத்துக்குரியவர்களும் இந்த உலக மக்களைப் போல நடந்துகொள்ளுகிறவர்களுமாய் இருக்கிறீர்கள்" என்று பவுல் அவர்களைக் கடிந்துகொண்டார். நான் பவுலுடைய கூட்டத்தைச் சேர்ந்தவர் என்றும், நான் அப்பொல்லோவுடைய கூட்டத்தைச் சேர்ந்தவர் என்றும் நீங்கள் சொல்லிக்கொள்வது தவறு என்று சுட்டிக்காட்டுகிறார். பவுலாகிய நானும் அப்பொல்லோவும் தேவனுடைய ஊழியக்காரர்கள்தான், எங்கள் மூலம் நீங்கள் தேவனை விசுவாசித்தீர்கள்; பவுலோ அப்போல்லோவோ எஜமானன் அல்ல, நம் அனைவருக்கும் தேவன் ஒருவரே எஜமானன் என்று அவர்களுக்குச் சொன்னார்.

இயேசுவின் சரீரமாகிய சபையில் இணைந்த விசுவாசிகளாகிய நமக்கும் அதே மனநிலை இருக்க வேண்டும். ஏனெனில், ஒரு திருச்சபை என்பது நம்மைப் பற்றியதோ, வேறு ஒரு நபரைப் பற்றியதோ, மற்றவர்களைப் பற்றியதோ அல்ல; மாறாக, அது இயேசுவைப் பற்றியது. ஆகவே, நான் இந்தப் போதகரைச் சார்ந்தவன் என்றோ, நான் இந்தத் தலைவரைச் சார்ந்தவன் என்றோ, இந்த ஊழியரைச் சார்ந்தவன் என்றோ பேசும் நிலைக்கு ஒருபோதும் வரக்கூடாது. அப்படியொரு நிலை வந்தால், அது இயேசுவின் சரீரமாகிய சபை அங்கத்தினர்களிடையே சண்டை சச்சரவுகளையே கொண்டுவரும். உலக அளவில் தற்போது உள்ள திருச்சபை சூழ்நிலைகளை நாம் கவனித்துப் பார்க்கும்பொழுது, ஒரு சில ஊழியர்களை உயர்த்திப் பேசுவதும், வேறுசில ஊழியர்களை தாழ்த்திப் பேசுவதுமே

அநேக திருச்சபைகளின் அழிவுக்குக் காரணமாக இருக்கிறது. 1 கொரிந்தியர் 3:21ல் பவுல், *“இப்படியிருக்க, ஒருவனும் மனுஷரைக்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பானாக”* என்று எழுதுகிறார். ஆகவே, நாம் அனைவருமே, எந்த ஒரு தேவ மனிதரையோ, திருச்சபைத் தலைவரையோ முக்கியப்படுத்தாமல், இயேசு கிறிஸ்துவை மட்டும் உற்று நோக்கி வாழ்ந்தால், அவருடைய சரீரமாகிய திருச்சபையின் அங்கத்தினர்களாகிய நாம் அனைவரும் அவரில் பலமாக வளர்ந்து, உறுதியாயிருந்து ஒரே சரீரமாக இணைந்திருப்போம். திருச்சபைத் தலைவர்களுக்குக் கொடுக்க வேண்டிய கனத்தைக் கொடுக்க வேண்டும் என்றாலும், அவர்களை நமக்காக ஊழியம் செய்ய, தேவன்தான் நியமித்திருக்கிறார் என்ற தெளிவும் நமக்கு நிச்சயம் தேவை. ஆகவே, உங்களுடைய உள்ளூர் திருச்சபையில் நீங்கள் யாருக்கு ஆதரவு தெரிவிக்கிறீர்கள், அல்லது உங்களுக்கு எந்த ஊழியரைப் பிடிக்கும் என்று கேட்டால், “பாஸ்டர்” என்று சொல்லாமல், “இயேசு” என்று சொல்லுங்கள்.

இயேசுவை நம் வாழ்வின் நோக்கமாக வைத்து நாம் வாழும்பொழுது, அவருடைய சரீரமாகிய திருச்சபையில் நமக்கு நியமிக்கப்பட்ட தூரத்தைவிட இன்னும் அதிகமாகப் பயணிக்க முடியும்; எதுவும் நம்மைப் பிரிக்க முடியாது. ஒரு போதகர் தன்னுடைய திருச்சபையில் பிரிவினைகள் வராமல் கவனமாகப் பார்த்துக்கொள்கிறார் என்றால், அது என்னை மிகவும் வியப்பில் ஆழ்த்துகிறது. ஏனெனில், என் சபையில் இரண்டு, மூன்று பிரிவுகளாக விசுவாசிகள் பிரிந்துபோயிருக்கிறார்கள் என்று அநேக போதகர்களிடமிருந்து அதிகமாகக் கேட்க முடிகிறது. நான் இதுவரை சந்தித்த போதகர்களிலேயே, ஒரே ஒரு போதகர் மட்டும்தான், என்னுடைய திருச்சபையில் இதுவரை பிரிவினையே இல்லை என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். அதுபோலவே, ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சும் இருக்க வேண்டும்

என்பதே என் ஆவல். அநேக ஊழியர்கள், அநேக தலைவர்கள், அநேக ஊழியங்கள் என்று நம் திருச்சபை வளரும்பொழுது, எந்தவொரு போதகருக்கோ, தலைவருக்கோ, விசுவாசிக்கோ முக்கியத்துவம் கொடுக்காமல், இயேசுவை மாத்திரம் மையமாக வைத்திருக்கும்பொழுது, அதுபோல பிரிவினைகள் இல்லாமல் வளரமுடியும்.

**கலாத்தியர் 5:19-21**

**19 மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன;
அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம்,**
**20 விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள்,
வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள்,
மார்க்கபேதங்கள்.**
**21 பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள்
முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள்
தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே
நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**ரோமர் 8:8**

**மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள்.**

## யூகத்தின் அடிப்படையிலான வாக்குவாதங்கள்

**1 தீமோத்தேயு 6:3-5**

**3 ஒருவன் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்
ஆரோக்கியமான வசனங்களையும், தேவபக்திக்கேற்ற
உபதேசங்களையும் ஒப்புக்கொள்ளாமல், வேற்றுமையான
உபதேசங்களைப் போதிக்கிறவனானால்,**
**4 அவன் இறுமாப்புள்ளவனும், ஒன்றும் அறியாதவனும்,
தர்க்கங்களையும் வாக்குவாதங்களையும் பற்றி
நோய்கொண்டவனுமாயிருக்கிறான்; அவைகளாலே பொறாமையும்,
சண்டையும், தூஷணங்களும், பொல்லாத சம்சயங்களுமுண்டாகி,**
**5 கெட்டசிந்தையுள்ளவர்களும் சத்தியமில்லாதவர்களும் தேவபக்தியை
ஆதாயத்தொழிலென்று எண்ணுகிறவர்களுமாயிருக்கிற
மனுஷர்களால் உண்டாகும் மாறுபாடான தர்க்கங்களும் பிறக்கும்;
இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு.**

தேவனுடைய வார்த்தைகளில் இல்லாத ஒரு சில வார்த்தைகளைப் பற்றியோ, ஒரு சிலருடைய கருத்துக்களைப் பற்றியோ வாக்குவாதங்கள் செய்வது சண்டை சச்சரவுகளுக்கு மற்றுமொரு காரணமாகிறது. திருச்சபையைச் சேர்ந்த சிலர் எவ்விதத்திலும் முக்கியமற்ற விஷயங்களைக் குறித்து வாக்குவாதம் செய்கிறார்கள். உதாரணத்துக்கு, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்கும்பொழுது, தலையை முன்பக்கமாகக் குனிந்து மூழ்க வேண்டுமா? பின்பக்கமாகச் சாய்த்து மூழ்க வேண்டுமா? எது சரியான முறை என்று ஒருசிலர் வாக்குவாதங்களில் ஈடுபடுகிறார்கள். சில வேத அறிஞர்களின் கூற்றுக்களை வைத்து, இதுதான் சரி என்று வாதிடுகிறார்கள். ஆனால், என்னைப் பொருத்தவரையில், ஒருவர் மனம்திரும்பி, தண்ணீருக்குள் போய், வெளியே புதிய ஜீவனோடு வந்தாலே போதும், அதுதான் ஞானஸ்நானம் என்று கருதுகிறேன். ஆகவே, ஒருசில மனிதர்களின் கருத்துக்களை வைத்து வாதிடுவதைவிட, தேவனுடைய வார்த்தைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டு அவைகளில் கவனம் செலுத்தினாலே போதும், அப்போது மனிதர்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் இல்லாமல் போய்விடும். ஆகவே, இதுபோன்ற யூகத்தின் அடிப்படையிலான கருத்துக்களை வாதிடுவதிலிருந்து விலகியிருங்கள். மேலும், வேதாகமத்தில் உள்ள ஒருசில உபதேசங்கள் தெளிவாகப் புரியவில்லை என்றால், தேவனுடைய வார்த்தையில் நமக்கு எந்த அளவுக்குப் புரிந்துள்ளதோ, அதின் அடிப்படையில் வாழக்கடவோம்.

## புத்தியீனமான கேள்விகள்

**2 தீமோத்தேயு 2:23-25**

**23 புத்தியீனமும் அயுக்தமுமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்குமென்று அறிந்து, அவைகளுக்கு விலகியிரு.**

**24 கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும்.**

**25 எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும்,**

சண்டை சச்சரவுகளை மட்டுமே ஏற்படுத்தும் புத்தியீனமானதும் அறியாமையை வெளிப்படுத்துவதுமான கேள்விகளைத் தவிர்த்துவிடுங்கள். உதாரணத்திற்கு, ஜான் என்ற உங்களுடைய கல்லூரி நண்பனுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க நீங்கள் ஆசைப்படுகிறீர்கள் என வைத்துக்கொள்வோம். அவன் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருந்தபோதிலும், இயேசு கிறிஸ்துவை தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளமல் இருக்கிறான். ஆகவே, நீங்கள் அவனிடம், “நீ ஏன் ஆராதனைக்குச் செல்வதில்லை?” என்று அன்போடு கேட்கிறீர்கள். உடனே அவன், “ஓ! அப்படியானால் நீயும் மறுபடியும் பிறந்ததாகச் சொல்லிக்கொள்கிறார்களே! அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவனா?” என்று கிண்டலாகக் கேட்கிறான். மேலும், அவன், காயீனும் ஆபேலும் யாரைத் திருமணம் முடித்தார்கள் என்று சொல்லு, நான் உன்னுடைய சுவிசேஷத்தைக் கேட்கிறேன் என்று சொல்ல, உடனே நீங்கள் இவனுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல், ஆண்டவரே எனக்கு ஞானம் தாரும் என்று ஜெபிக்கிறீர்கள். பின்பு, எனக்குத் தெரிந்தவரை, காயீனும், ஆபேலும் தங்கள் சகோதரிகளைத்தான் திருமணம் முடித்திருக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். பின்பு, அவன் வேதாகம கருத்துக்களைக் கேலி கிண்டல் செய்ய ஆரம்பிக்கிறான். நீங்கள் வெட்கப்பட்டு அவனிடமிருந்து விலகிச்செல்லும் சூழ்நிலையைச் சந்திக்கிறீர்கள்.

ஆகவே, இதுபோன்ற சண்டை சச்சரவுகளை ஏற்படுத்தும் கேள்விகளுக்கு விலகிவிடுவது நல்லது. தேவனுக்கு ஊழியம் செய்கிறவர்கள், சண்டை சச்சரவுகளுக்கு விலகி வாழ வேண்டும் என்று பவுல் அறிவுறுத்துகிறார். வேதாகமத்தோடு தொடர்புடைய

எல்லா கேள்விகளுக்குமான பதில் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்று அவசியமில்லை. ஜான் கேட்டதைப் போன்ற கேள்விகளுக்கு நீங்கள் பதில் அளிக்க முயற்சிக்கும்பொழுது, அது சம்பந்தமான வேறு அநேக கேள்விகளுக்கும் அது வழிவகுக்கும். கடைசியில் அது வாக்குவாதங்களாக மாறி சண்டை சச்சரவுகளோடு, நட்பை முறித்துக்கொள்ளும் நிலைக்குப் போகக்கூடும். அதற்குப் பதிலாக, ஜானுக்கு மிகவும் தேவையானதும் முக்கியமானதுமான கருத்துக்களைப் பேசி, இயேசுவின் அன்பை அவனோடு பகிர்ந்துகொள்வது மிகவும் அவசியம்.

# 3

# சண்டை சச்சரவுகளின் எதிர் விளைவுகள்

**யாக்கோபு 3:16**
**வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு.**

## சண்டை சச்சரவுகள் குழப்பத்திற்கும் எல்லாவித கெட்ட செயல்களுக்கும் கதவுகளைத் திறந்து கொடுக்கும்

பொறாமை, சுயநல நோக்கத்தையும் சுயநல விருப்பத்தையும் நாடுகிற இடத்தில் சண்டைகளும் சச்சரவுகளும் இருக்கும் என்று வேதாகமம் குறிப்பிடுகிறது. நாம் ஒருவரோடு சண்டையிடும்பொழுது, குழப்பங்களுக்கும், எல்லாவித கெட்ட செயல்களுக்கும் கதவைத் திறந்துகொடுக்கிறோம். எப்படியெனில், “சாத்தானே, வா! வந்து கொண்டாடு!” என்று அவனுக்குக் கதவைத் திறந்துகொடுப்பதுபோல இருக்கிறது. அவ்வாறாக, சாத்தான் நம் வாழ்க்கையில் நுழைய நாமே இடங்கொடுத்து, வியாதியினால் நம்முடைய உடல்நலத்தைக் கெடுத்தல், நம்முடைய குடும்பத்திலும் வேலைசெய்யும் இடங்களிலும் குழப்பங்களை ஏற்படுத்துதல், மனச்சோர்வுகளை உண்டாக்குதல், தோல்விகள், பணப்பிரச்சனைகள் ஆகிய எல்லாவற்றையும் செய்ய அவனுக்கு இடங்கொடுப்பதுபோலாகிறது. நாம் சண்டை சச்சரவுகளில் ஈடுபடும்பொழுது, அங்கே எல்லாவித பிசாசின் கிரியைகளும் நடக்கிறது.

உதாரணத்திற்கு, ஒரு திருச்சபை உறுப்பினர்கள் சண்டை சச்சரவுகளில் ஈடுபடும்பொழுது, அது நிச்சயம் பிரிவினைகளைச் சந்திக்கும். சாத்தான் அதைத் தனக்குச்

சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு தன்னுடைய எல்லாவித கெட்ட செயல்களையும் அங்கு செயல்படுத்தி, அந்தக் கூட்டத்தையே அழிக்க ஆரம்பிப்பான். அதுபோலவே, ஒரு குடும்பத்தில் உள்ள கணவன் மனைவி சண்டை சச்சரவுகளில் ஈடுபடும்பொழுது, சாத்தான் அந்தக் குடும்பத்தையே அழிக்கிறான். ஒருசிலருடைய திருமணங்களில் சண்டையே இல்லை என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால், சண்டை சச்சரவுகள் இல்லாத குடும்பமே இல்லை என்பதுதான் உண்மை. நானும், என் மனைவி ஏமியும் அதற்கு விதிவிலக்கு அல்ல. ஆகவே, நம்மால் முடிந்த அளவு சண்டை சச்சரவுகளைத் தவிர்த்து வாழாவிட்டால், எதிரி நம் குடும்பத்திற்குள் நுழைந்து, நம் திருமண பந்தத்தைப் பிரித்து, நம் வாழ்க்கையை அழிப்பது நிச்சயம்.

ஆகவே, மற்றவர்கள் என்ன சொன்னாலும், என்ன செய்தாலும், எந்தச் சூழ்நிலையிலும், நாம் சண்டை சச்சரவுகள் இல்லாமல் வாழ தேவனுடைய உதவிக்காக நிச்சயம் வேண்டுதல் செய்ய வேண்டும். சாத்தானுடைய கெட்ட செயல்கள் நம் வாழ்வில் நுழையாமல் இருக்க வேண்டுமானால், சண்டை சச்சரவுகள் என்ற இந்தப் புற்றுநோய் நம்மைத் தாக்காமல் பாதுகாப்பாக வாழ்வது மிகவும் அவசியம்.

# 4

# சண்டை சச்சரவுகளை உன் வாழ்விலிருந்து விலக்குதல்

சண்டை சச்சரவுகளை எல்லோருமே அனுபவித்திருப்பார்கள். ஏனெனில், மக்களோடு சண்டை சச்சரவுகள் ஏற்படும் சூழ்நிலையை நாம் அனைவருமே சந்திக்கிறோம். ஆனால், அதில் உள்ள ஆபத்துக்களை உணர்ந்து, அது நம் வாழ்வைப் பாதிக்காமல் வாழ, நம்மால் முடிந்த அளவு அதைத் தவிர்த்து வாழ முயற்சி செய்ய வேண்டும்.

**நீதிமொழிகள் 17:1**

**சண்டையோடுகூடிய வீடுநிறைந்த கொழுமையான பதார்த்தங்களைப் பார்க்கிலும், அமரிக்கையோடே சாப்பிடும் வெறும் துணிக்கையே நலம்.**

கஞ்சியோ கூழோ குடித்தாலும் பரவாயில்லை; ஒரு சிறிய வீட்டில் சண்டை சச்சரவுகள் இல்லாமல் வாழ்வதில் எத்தனை இன்பம். ஆனால், பெரிய அரண்மனையில், ஓயாத சண்டைகளுக்கு மத்தியில், விருந்து சாப்பாடு சாப்பிடுவதில் என்ன சந்தோஷம் இருக்கப்போகிறது.

**நீதிமொழிகள் 20:3**

**வழக்குக்கு விலகுவது மனுஷனுக்கு மேன்மை; மூடனானவன் எவனும் அதிலே தலையிட்டுக்கொள்வான்.**

மூடர்கள் சண்டை சச்சரவுகளில் வலியப்போய் சிக்கிக்கொள்கிறார்கள் என்பதால், சண்டை சச்சரவுகளுக்கு விலகி வாழ்வது மனுஷனுக்கு மேன்மை. ஒரு சண்டையை ஆரம்பிக்க மிகப் பெரிய அளவில் ஞானம் தேவைப்படாது; ஆனால், சண்டைகளில் ஈடுபடாமல் இருப்பது, ஒரு நற்குணமுள்ள ஆணுக்கும், கண்ணியமுள்ள பெண்ணுக்கும்

மிகவும் மேன்மை.

**நீதிமொழிகள் 20:3 (தி மெசேஜ் மொழிபெயர்ப்பு)**
**சண்டை சச்சரவுகள் ஏற்படாமல் பேச்சை வேறுபக்கம் திருப்புகிறவர்கள், நல்ல குணமுடையவர்கள் என்பதைக் காட்டுகிறது; ஆனால், சண்டைபோட ஆசைப்படுகிறவர்கள் முட்டாள்கள் என்பதைக் காட்டுகிறது.**

ஆகவே, சண்டை சச்சரவுகளுக்கு விலகி வாழ்தல் நல்ல குணத்துக்கு அடையாளமாக இருக்கிறது.

## சண்டை சச்சரவுகளுக்கு இடம் கொடாதீர்கள்

**நீதிமொழிகள் 17:14 (தி மெசேஜ் மொழிபெயர்ப்பு)**
**சண்டை சச்சரவுகளின் துவக்கம் என்பது, ஒரு அணைக்கட்டிலிருந்து நீர் கசிவது போன்றது. ஆகவே, அணைகட்டு வெடிப்பதற்கு முன்பாகவே, அதை அடைத்துவிட வேண்டும்.**

உதாரணத்திற்கு, நண்பர்களுடன் தேநீர் அருந்தும்பொழுது, பல காரியங்களைப் பேசிக்கொண்டு இருக்கும்பொழுதே, யார் சிறப்பான மட்டைப்பந்து வீரர் என்று பேச ஆரம்பிக்கலாம். நாம் “சச்சின்" என்று சொல்லலாம், மற்ற நண்பர்கள் மற்ற வீரர்களின் பெயர்களைச் சொல்லலாம். அப்படியே கலந்துரையாடல் தொடரலாம். ஆனால், அந்த விவாதம் கொஞ்சம் கொஞ்சமாக சூடான விவாதமாக மாறுவதை நாம் கவனிக்கலாம். ஆரம்பத்தில், அர்த்தங்கள் நிறைந்த அமைதியான விவாதமாகத் தொடங்கியது, பின் அது சூடான விவாதமாக மாறி, கடைசியில் சண்டை சச்சரவுகளுக்குள் வந்திருக்கலாம். அப்படியான ஒரு சூழ்நிலையில், விவாதம் எங்கு சூடாக ஆரம்பிக்கிறதோ, அங்கேயே நாம் அந்த விவாதத்தை நிறுத்திவிடுவது நல்லது. அந்த சூழ்நிலையில் நாம் வேறு ஒரு காரியத்தைப் பற்றிப் பேசி, பேச்சை திசைதிருப்புவது நல்லது. முடியாதபட்சத்தில், விவாதங்கள் அப்படியாகச் சூடாக மாறும்பொழுது, நாம் அதிலிருந்து விலகிச் செல்வதற்கும்

தயாராக இருக்க வேண்டும். அணைக்கட்டில் லேசாக தண்ணீர் கசிய ஆரம்பிக்கும்பொழுது, அந்த அணைக்கட்டு வெடிப்பதற்கு முன்பாகவே, அந்தக் கசிவை அடைத்துவிட வேண்டும். விவாதம் சண்டை சச்சரவுகளாக மாறுவதற்கு நாம் வாய்ப்பளிக்கக் கூடாது.

## *உங்கள் வேலையை மாத்திரம் நீங்கள் கவனியுங்கள்*

நம்முடைய வேலையை மாத்திரம் நாம் கவனிக்கலாம் என்று சொல்வது எளிதாக இருக்கலாம். ஆனால், நடைமுறையில் அது மிகவும் கஷ்டம். நாம் என்னென்ன வேலைகளைச் செய்ய வேண்டும் என்று சிந்திக்கவும், மற்றவர்கள் என்னென்ன வேலைகளைச் செய்யவேண்டியுள்ளது என்பதைச் சிந்திக்க வைக்கவும் வேண்டும். அப்பொழுது உறவுகளுக்குள் சண்டை சச்சரவுகள் தடுக்கப்படும்.

**நீதிமொழிகள் 26:17**
**வழியே போகையில் தனக்கடாத வழக்கில் தலையிடுகிறவன் நாயைக் காதைப் பிடித்திழுக்கிறவனைப் போலிருக்கிறான்.**

நம்முடைய இந்தியாவில் உள்ள நகரங்களின் தெருக்களில், சாலை ஓரங்களில் இருவர் சண்டையிட்டுக்கொண்டே போவதை நாம் கவனித்திருக்கலாம். அவர்கள் எதைக்குறித்து அப்படிச் சண்டை போடுகிறார்கள் என்று நமக்குத் தெரியாமல் இருக்கலாம். உதாரணத்திற்கு, ஒருநாள் சாலையில் நடந்துபோகும்பொழுது, அப்படியொரு காரியத்தை நீங்கள் கவனிக்கிறீர்கள். அவர்கள் நமக்கு முன்பின் தெரியாதவர்களாக இருந்தபோதிலும், அவர்கள் எதைக் குறித்து சண்டைபோடுகிறார்கள் என்பதைக் கவனித்து, நாம் "நடுவராக" நின்று அவர்கள் பிரச்சனையைத் தீர்த்துவைக்கலாமே என்ற ஆவல் உங்களுக்கு ஏற்படுகிறது. இருவரது வாதங்களையும் கேட்டறிகிறோம். உடனடியாக, நம்முடைய கைகளை மடித்துக்கட்டிக்கொண்டு, அவர்களுடைய சண்டையைத் தீர்த்துவைக்க களத்தில்

இறங்குகிறோம். கடைசியில், நாம் ஏன்தான் இவர்கள் சண்டையில் தலையிட்டோமோ என்று யோசிக்கும் சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறோம். இதுதான், நமக்குத் தேவையில்லாத விஷயத்தில் தலையிட்டு மாட்டிக்கொள்வது என்பது. இதைக் குறித்துத்தான், "வழியே போகையில் *தனக்கடாத வழக்கில் தலையிடுகிறவன்* நாயைக் காதைப் பிடித்திழுக்கிறவனைப் போலிருக்கிறான்" என்று சொல்லி வேதாகமம் நம்மை எச்சரிக்கிறது.

*"ஒருவன் உனக்குத் தீங்குசெய்யாதிருக்க, காரணமின்றி அவனோடே வழக்காடாதே"* என்று நீதிமொழிகள் 3:30ல் சொல்லப்பட்டு இருக்கிறது. இருவர் சண்டையிட்டுக்கொள்வதைக் கவனிக்கிற நாம், நமக்குச் சம்பந்தமே இல்லாத அவர்கள் பிரச்சனைகளைத் தீர்த்துவைக்கும் நீதிபதியாக நம்மை நினைத்துக்கொண்டு செயல்பட வேண்டாம் _ இது ஒரு பொது அறிவு மற்றும் நீதிமொழிகளில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் நீங்கள் அவர்களுக்கு உண்மையிலேயே உதவ நினைத்தால், காவலர்களை அழைத்து, அவர்களுக்கு உதவி செய்யலாம். மேலும், நமக்கு அறிமுகமே இல்லாதவர்களுடைய பிரச்சனைகளில் நாம் தேவையில்லாமல் தலையிடாமல் இருப்பதே நமக்கு நல்லது. நமக்குரிய வேலைகளைச் செய்வதில் நாம் கவனமாக இருக்கும்பொழுது, இதுபோன்ற தேவையில்லாத மற்றவர்களுடைய பிரச்சனைகளில் தலையிடாமல் இருக்க முடியும்.

## *உங்கள் நோக்கம் என்ன என்பதில் கவனம் தேவை*

அநேக நேரங்களில், நம்முடைய நோக்கம் தவறானதாக இருக்கும். சண்டையிடும் நோக்கத்தில் நாம் இருக்கும்பொழுது, நாம் போராட்டங்களில் சிக்கிக்கொள்வது நிச்சயம்.

**பிலிப்பியர் 2:3**
**ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்.**

இன்னொருவரோடு சண்டைபோடும் நோக்கத்தோடு நாம் எதையும் செய்யக்கூடாது. உதாரணத்திற்கு, நம் மனதை நோகப்பண்ணும் அளவில் நமக்கு ஒருவர் ஒரு மின்னஞ்சல் அனுப்பியிருந்தால், நாம் அவருக்கு ஒரு வைரஸ் அனுப்பி அவரது கணினியில் உள்ள தகவல்களை ஒழித்துக்கட்டலாம் என்று நினைக்கக்கூடாது. நாம் அப்படிச் செய்தால், நம் இருவருக்குமான சண்டை சச்சரவுகளுக்கு நாமே அடித்தளம் போடுவதுபோல இருக்கும்.

**யாக்கோபு 4:1,2**
**1 உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது; உங்கள் அவயவங்களிலே போர்செய்கிற இச்சைகளினாலல்லவா?**
**2 நீங்கள் இச்சித்தும் உங்களுக்குக் கிடைக்கவில்லை; நீங்கள் கொலைசெய்தும், பொறாமையுள்ளவர்களாயிருந்தும், அடையக்கூடாமற்போகிறீர்கள்; நீங்கள் சண்டையும் யுத்தமும் பண்ணியும், நீங்கள் விண்ணப்பம்பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை.**

தவறான நோக்கங்களோடு, தவறான சில செயல்களைச் செய்வதே, நம்மிடையே சண்டைகளும், யுத்தங்களும் ஏற்படக் காரணமாக அமைகிறது. ஆகவே, நாம் ஒரு செயலைச் செய்வதற்கு முன்பாக, எதற்காக அதைச் செய்ய நினைக்கிறோம் என்று நம் நோக்கத்தை சரிபார்த்து காத்துக்கொள்ள வேண்டும். ஒருவர் நமக்குச் செய்த செயலுக்காக நாம் பழிவாங்க வேண்டும் என்பது நமது நோக்கமாக இருந்தால், அது சண்டையிடும் நோக்கமாக இருக்கிறது, நாம் அதைச் செய்யக் கூடாது.

## *நீங்கள் பேசும் வார்த்தைகளில் கவனம் தேவை*

நாம் பேசும்பொழுது பயன்படுத்தும் சொற்களில் கவனம்

தேவை.

**நீதிமொழிகள் 18:6**
**மூடனுடைய உதடுகள் விவாதத்தில் நுழையும், அவன் வாய் அடிகளை வரவழைக்கும்.**

நாம் பேசும்பொழுது மூடத்தனமான வார்த்தைகளைப் பயன்படுத்துவது, சண்டை சச்சரவுகளை உருவாக்கி, நாம் மற்றவர்களிடம் பதிலடி வாங்குவதற்குக் காரணமாக அமைந்துவிடும். மதியீனமான வார்த்தைகள் மக்களிடையே வாதங்களை உருவாக்கிவிடும்; ஆகவே, நாம் பேசும்பொழுது, பயன்படுத்தும் ஒவ்வொரு வார்த்தைகளையும் கவனமாகப் பயன்படுத்த வேண்டும்.

**நீதிமொழிகள் 22:10**
**பரியாசக்காரனைத் துரத்திவிடு; அப்பொழுது வாது நீங்கும், விரோதமும் அவமானமும் ஒழியும்.**

பரியாசக்காரானுடைய பேச்சில் பயன் எதுவும் இருக்காது. மாறாக, சண்டைகளை உருவாக்கும் வார்த்தைகளே அப்படிப்பட்டவர்கள் வாயிலிருந்து வரும். ஒருசிலர், இப்படிப்பட்ட நபர்களையே அடிக்கடி சந்திக்கவும் நேரிடலாம். உதாரணத்திற்கு, நீங்கள் புதிதாக ஒரு நிறுவனத்தில் வேலைக்குச் சேர்கிறீர்கள். அங்கே சுமார் 25 வருட அனுபவம் உள்ள ஒருவரை நீங்கள் சந்திக்கிறீர்கள். அவர் உங்களிடம், “நான் இந்த நிறுவனத்தில் ஆரம்பத்திலிருந்தே பணியாற்றிவருகிற நல்ல அனுபவசாலி. எனக்கு இங்கு நடைபெற்ற அனைத்தும் நன்கு தெரியும்” என்று சொல்கிறார். பின்பு, எதிர்மறையான பல விஷயங்கள் அந்த நிறுவனத்தில் நடந்ததாகக் கூறுகிறார். அப்படியானால், இந்த நிறுவனத்தில் நல்லது எதுவும் நடக்கவில்லையா என்று நீங்கள் சிந்திக்க ஆரம்பிக்கிறீர்கள். அந்த நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து நபர்களின் கெட்ட செயல்களை எல்லாம் இவர் தெரிந்திருந்தும், ஏன்

இந்த நிறுவனத்திலேயே இவர் கடந்த 25 வருடங்களாக வேலை செய்கிறார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஆகவே, அப்படிப்பட்டவர்களுடைய நோக்கம் மற்றவர்களுக்குள் சண்டை சச்சரவுகளை உருவாக்குதே என்பதைப் புரிந்து, அப்படிப்பட்டவர்களுக்கு விலகி வாழ்வதே நல்லது என்று வேதாகமம் விளக்குகிறது. அவர்கள் மூலம் உருவாகும் சண்டை சச்சரவுகளுக்கும் விலகி வாழ்வது மிகவும் அவசியம்.

நாம் பேசும்பொழுது, சொல்லும் ஒரு வார்த்தையால் சண்டைகள் ஏற்பட அநேக வாய்ப்புகள் உள்ளது. ஆகவே, நாம் மற்றவர்களோடு பேசும்பொழுது, பயன்படுத்தும் வார்த்தைகளில் கவனம் தேவையாய் இருக்கிறது. நாம் ஒருவரைப் பற்றிச் சொல்லும் சாதாரண கருத்துதானே என்று நீங்கள் பேசும் சில வார்த்தைகளும் சண்டைகளுக்கு காரணமாகும். எப்படியெனில், நம்முடைய நண்பர் ஒருவரின் தலைமுடி இந்த நிறத்தில் இருக்கிறதே என்று கிண்டலாகப் பேசியது, அவருக்கு அவமானத்தை உண்டுபண்ணி, அவரைக் காயப்படுத்திவிடக் கூடும். ஒருவேளை, அவர் தன் தலைமுடியை அந்த நிறத்துக்குக் கொண்டுவர, அவர் அதிக பணத்தைச் செலவு செய்ததால், நாம் அவரை அப்படிக் கேலி செய்திருக்கலாம். ஆனால், நாம் பயன்படுத்திய வார்த்தை அவர் மனதைக் காயப்படுத்தி, நட்பை இழக்கவும் செய்துவிடும். ஆகவே, இப்படிபட்ட சண்டை சச்சரவுகள் வரக் காரணமாக உள்ள வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் இருக்கக் கவனமும் ஞானமும் தேவை. இவ்வாறு சாதாரண விஷயங்களில் நாம் கவனம் செலுத்தினால், அநேக சண்டை சச்சரவுகளைத் தவிர்க்க ஏதுவாகும்.

## உங்கள் உணர்வுகளில் கட்டுப்பாடு தேவை

**நீதிமொழிகள் 15:18**

**கோபக்காரன் சண்டையை எழுப்புகிறான்; நீடியசாந்தமுள்ளவனோ சண்டையை அமர்த்துகிறான்.**

உக்கிர கோபக்காரனும் கோபக்கார மனிதனும் சண்டையைத் தூண்டிவிடுகிறான். ஆனால், கோபப்படுவதற்குத் தாமதிக்கிறவனோ அதைத் தணியப்பண்ணுகிறான். நான் என்னுடைய 12வது வயதில் இரட்சிக்கப்பட்டபொழுது, கிறிஸ்தவ விசுவாச வாழ்வில் நான் வளர்ந்துவந்தபோதிலும், அடிக்கடி என்னைக் கட்டுப்படுத்த முடியாமல், முன்கோபக்காரனாக இருந்தேன். ஒருநாள், என் பள்ளியில், எனக்கு மிகவும் பிடித்த விளையாட்டான கால்பந்து விளையாட்டை நாங்கள் விளையாடிக்கொண்டிருந்தபொழுது, ஒருவன் என் காலைத் தடுக்கிவிட்டான். உடனே, எனக்குக் கோபம் வந்து, அது யார் என்று கவனிக்காமலேயே, அவனுடைய முதுகில் சற்று வேகமாக உதைத்துவிட்டேன். அவனும் ஒரு விசுவாசி என்று பின்புதான் தெரிந்தது; அதுவும் அவன் என்னுடைய ஜெபக்குழுவில் உள்ளவன் என்பதை அறிந்துகொண்டேன். அந்த சம்பவத்தோடு அவனுக்கும் எனக்கும் உள்ள நட்பு முறிந்துபோனது. நாங்கள் இருவரும் விசுவாசிகளாக இருந்தபோதிலும், எங்களால் எங்கள் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. என்னுடைய கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாமல், நான் அவனைக் காயப்படுத்திய விதம் அவனுடைய வாழ்க்கையில் மறக்கமுடியாத ஒரு சம்பவமாக மாறிப்போனது. பின்னர் வந்த நாட்களில், அதுகுறித்து நான் மனம்திரும்ப வேண்டியிருந்தது. அவனோடு நான் அப்படி நடக்காமல், எங்கள் இருவர் நட்பும் தொடர்ந்து இருந்திருந்தால், அவன்மூலம் நான் ஆவிக்குரிய வாழ்வில் இன்னும் வளர அவன் எனக்கு உதவியிருப்பானே என்று நான் பின்னர் நினைத்துப் பார்த்தேன். ஆனால், என் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாமல், அதை நான் இழந்துபோனேன்.

**நீதிமொழிகள் 16:32**

**பலவானைப்பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப்பார்க்கிலும் தன் மனதை**

**அடக்குகிறவன் உத்தமன்.**

நம்முடைய கோபம் நம் கட்டுப்பாட்டில் இருந்தால் போதும், உலகிலேயே மிகவும் பலசாலியாகக் கருதப்படுகிற அர்னால் ஸ்வார்ஸனகரைவிட நாம்தான் மிகப்பெரிய பலசாலி. ஆம், அவருக்கு இருக்கிற பெலத்தைவிட, நமக்கு உள்ள பெலன் அதிகமானது. ஆகவேதான், *“பட்டணத்தைப் பிடிக்கிறவனைப்பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்”* (நீதிமொழிகள் 16:32) என்று வேதாகமம் குறிப்பிடுகிறது. என்னுடைய கோபத்தைக் கட்டுப்படுத்தும் பெலன்மட்டும் எனக்கு இருந்தால், ஒரு நகரத்தைக் கைப்பற்றுகிற வீரனைவிட நானே பெலசாலி என்று எனக்கு நானே சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, நீதிமொழிகள் 16:32ஐ நான் அடிக்கடி எனக்குள்ளேயே சொல்லி, என் கோபத்தைக் கட்டுப்பாட்டில் வைக்கப் பழகிக்கொண்டேன். ஆகவே, நீங்களும் நானும் கோபத்தைக் கட்டுப்பாட்டில் வைத்து வாழ பழகிக்கொண்டால், சண்டை சச்சரவுகளை நம்மிடமிருந்து தூரத்தில் வைத்துக்கொள்ள முடியும்.

**நீதிமொழிகள் 25:8**
**வழக்காடப் பதற்றமாய்ப் போகாதே; முடிவிலே உன் அயலான் உன்னை வெட்கப்படுத்தும்போது, நீ என்ன செய்யலாம் என்று திகைப்பாயே.**

## *அவமானங்களைக் கண்டுகொள்ளாமல் வாழ பழகிக்கொள்ளுங்கள்*

**நீதிமொழிகள் 12:16**
**மூடனுடைய கோபம் சீக்கிரத்தில் வெளிப்படும்; இலச்சையை மூடுகிறவனோ விவேகி.**

ஒரு மூடனுடைய கோபம் சட்டென வெளியே வரும். அவனை சிறிதளவு அவமானமாகப் பேசினால் கூட, அவன் உடனடியாகப் பழிவாங்கிவிடுவான். அவனால், ஒரு நிமிடம்கூட யோசித்துப் பேசமுடியாது. ஆனால்,

விவேகி இலட்சையை மூடுகிறவனாய் இருக்கிறான்; அதை முற்றிலும் கண்டுகொள்ளாமல் மறந்துவிடுகிறான். ஆகவே, அவ்வாறான அவமானங்களைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிடப் பழகிக்கொள்ளுங்கள். ஏனெனில், நமக்கு ஏற்பட்ட அவமானத்திற்குப் பதிலாக அடுத்தவரை நாம் அவமானப்படுத்தாமல் இருக்கும்போது, நம்முடைய நல்ல குணத்தில் எந்த மாற்றமும் ஏற்படுவதில்லை. அவை வெறுமனேமக்களுடையகருத்து.ஏனெனில்,கிறிஸ்துவுக்குள் நான் யார் என்ற தெளிவு நமக்கு இருக்கும்பொழுது, நாம் அப்படிப்பட்டவர்களாகவே இருக்கிறோம்; மற்றவர்கள் நம்மை அவமானமாகப் பேசுவது ஒரு பொருட்டே அல்ல.

**1 பேதுரு 2:23**

**அவர் வையப்படும்போது பதில்வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்.**

இயேசுவை அவமானப்படுத்தியபொழுது, அவர் பதிலுக்கு அவர்களை அவமானப்படுத்தவில்லை. ஆகவே, நாமும் அவரையே மாதிரியாக வைத்து வாழவேண்டும். ஒரு வாத்து தண்ணீரை பின்னுக்குத் தள்ளி, முன்னேறிப்போவதுபோலவே, அவமானங்களை நாமும் கண்டுகொள்ளாமல் வாழப் பழகிக்கொள்ள வேண்டும். அப்பொழுது, நம்முடைய கோபத்தை நம்மால் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளவும் கவலைப்படாமல் இருக்கவும் முடியும்.

## *மென்மையாகப் பதில்சொல்லும் திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும்*

**நீதிமொழிகள் 15:1**

**மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்.**

உதாரணத்திற்கு, யாராவது ஒருவர் உங்களோடு

சண்டைக்கு ஆயத்தமாக இருக்கும்பொழுது, அவர்கள் வாயில் கடுஞ்சொற்களோடு, உங்களுக்கு எதிராக கடுமையான வார்த்தைகளைப் பேசத் துவங்கும்போது, நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். அவர்களுக்கு அமைதியாக பதில் சொல்லும்பொழுது, நீங்கள் அந்த சண்டைக்குள் இழுக்கப்படாமல் தப்பிக்கலாம். "மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்." ஆனால், நம்மில் அநேகர் அதற்கு எதிர்மறையாகப் பேசிவிடுகிறோம். ஆனால், இருவருக்கிடையே கருத்து வேறுபாடு வரும்பொழுது, கத்திக் கூச்சலிட்டு நாம்தான் சரி என்று சாதிக்க முயற்சிக்கிறோம், ஆகவே அந்தச் சூழ்நிலை அதிக தீவிரமாக மாறுகிறது. ஆகவேதான், மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும் என்று வேதாகமம் சொல்கிறது. நம்மிடம் சண்டைபோடுகிறவர்கள் கோபமாகப் பேசினால்கூட, நாம் அமைதியாகப் பதில்சொல்ல பழக வேண்டும்.

**2 தீமோத்தேயு 2:24**

**கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்கவேண்டும்.**

தேவனுக்கு ஊழியம் செய்கிறவர்கள் சண்டையிடாமல், எல்லோரோடும் அமைதியாகப் பேசி, மற்றவர்களுக்குப் பொறுமையோடு புத்திசொல்ல வேண்டும் என்று வேதாகமம் வலியுறுத்துகிறது. ஆகவே, அமைதியாகப் பேசும் திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும். சூடான விவாதங்களில்கூட, மிக அமைதியாக நம்முடைய பதில்களை எடுத்துவைக்கப் பழகவேண்டும். அவ்வாறான பழக்கங்கள், சண்டை சச்சரவுகளை நம் வாழ்விலிருந்து அகற்றி, அமைதியாக நம்மை வாழ வைக்கும்.

## விட்டுக்கொடுத்தல்

விட்டுக்கொடுத்து வாழும் திறமையையும் நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். அநேக நேரங்களில், அவ்வளவு முக்கியம் இல்லாததும் தவறானதுமான காரியங்களைக் கூட நாம் விட்டுக்கொடுக்காமல், விடாப்பிடியாகப் பிடித்துக்கொள்வது சண்டை சச்சரவுகள் தொடர வழிவகுக்கும். ஆபிரகாம் மற்றும் லோத் என்பவர்களின் வாழ்விலிருந்து உதாரணங்களைக் காண்போம் (ஆதியாகமம் 13:1-18).

லோத்து ஆபிரகாமுடைய அண்ணன் மகன். தேவன் வாக்குக்கொடுத்த தேசத்தை நோக்கி, அவர்கள் இருவரும் பயணம் செய்தபொழுது, அவர்கள் இருவருக்குமே திரளான ஆடுமாடுகளும், வேலைக்காரர்களும் "பெருகினார்கள்". ஆகவே, அவர்கள் இருவருடைய வேலைக்காரர்களுக்கும் அடிக்கடி சண்டை வந்தது. ஆகவே, அவர்கள் பயணம் முழுவதிலும், அநேக சண்டை சச்சரவுகள் ஏற்பட்டன. ஆகவே, ஆபிரகாம் ஒருநாள், நம்முடைய வேலைக்காரர்கள் இப்படியே தொடர்ந்து "சண்டையிட்டுக்கொண்டிருப்பதால்" நாம் ஒருமித்துப் பயணிப்பது சரியில்லை. நீ உனக்குப் பிடித்த இடத்தைத் தெரிவு செய்து, அதில் குடியிருந்துகொள். அதற்கு எதிரே உள்ள இடத்தில் நானும் என் குடும்பத்தார்களும் குடியிருந்துகொள்கிறோம் என்று லோத்திடம் சொன்னான். அப்பொழுது, ஆபிரகாம் நல்ல இடத்தைத் தான் தெரிந்துகொண்டு, மற்றதை லோத்திற்குக் கொடுக்காமல், நீ உனக்குப்பிடித்த இடத்தைத் தெரிவுசெய்துகொள் என்று விட்டுக்கொடுக்கிறதைப் பார்க்கிறோம்.

ஆகவே, சோதோம் கொமோரா நகரங்கள் இருந்த பகுதி செழிப்பான பகுதியாக இருந்தபடியால், லோத்து அந்தப் பகுதியைத் தனக்குத் தெரிந்துகொண்டு அங்கு வசிக்க ஆரம்பிக்கிறான். அவன் தன்

ஆடுமாடுகள், வேலைக்காரர்கள், குடும்பத்தார்களைக் கூட்டிக்கொண்டுபோய் அங்கு குடியிருக்க ஆரம்பிக்கிறான். அவ்வாறு, லோத்து போனவுடனேயே, தேவன் ஆபிரகாமிடத்தில், வாக்குப் பண்ணப்பட்ட இடங்களில் எல்லாம் நடந்து சுதந்தரிக்கச் சொன்னார். நீ கால் மிதிக்கும் எல்லா இடங்களையும் நான் உனக்குச் சொந்தமாக்கிக் கொடுப்பேன் என்றார். அந்த நாளிலிருந்து, ஆபிரகாமுடைய மிருக ஜீவன்களும் ஆஸ்தியும் ஏராளமாகப் "பெருகின". ஆபிரகாமின் வேலைக்காரனே, “கர்த்தர் என் எஜமானனை மிகவும் ஆசீர்வதித்திருக்கிறார்” என்று சொல்கிறதை நாம் பார்க்கலாம். ஆனால், பார்வைக்குச் செழிப்பான இடம் என்று சோதோம் கொமோராவிற்குப்போய்க் குடியிருந்த லோத்துக்கு, அந்த நகரம் அழிக்கப்பட்டபொழுது, உடுத்திய துணியோடு தப்பித்து ஓடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதை நாம் பார்க்கிறோம். விட்டுக்கொடுத்தது ஆபிரகாமே என்பதை மறந்துபோகாதீர்கள்.

ஆகவே, சிலவற்றை விட்டுவிடுவதற்கு நாம் கற்றுக்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு, உங்கள் குடும்பத்திற்குச் சொந்தமான வீட்டைக் குறித்து, கருத்துவேறுபாடு வரும்பொழுது, மற்றவர்களைவிட உங்களுக்குரிய பங்கு குறைத்துக் கொடுக்கப்படுவதாக இருந்தால்கூட, அதை விட்டுக்கொடுங்கள். நீங்கள் விடாப்பிடியாக, எனக்கும் சரிக்கு சமமாக பங்கு வேண்டும் என்று சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவதைவிட, எனக்குக் கிடைத்ததுபோதும் என்று விட்டுக்கொடுப்பது நல்லது. ஒன்று, உங்களது "நண்பர்" உங்களுக்குச் சொல்லுகிறபடி உங்களுக்கு உரிய பங்கைப் பெற பிடிவாதமாக சண்டையிடுவீர்கள், அல்லது நீங்கள் விட்டுக்கொடுப்பதன் மூலம் சண்டை சச்சரவுகள் கடந்துபோகும்படி செய்கிறீர்கள். அப்படிச்செய்து நீங்கள் விட்டுக்கொடுப்பதால், தேவனுடைய ஆசீர்வாதம் உங்களுக்குக் கிடைப்பது நிச்சயம்.

சண்டை சச்சரவுகளை நாம் ஆதரிக்கும்பொழுது, பரலோகம் தன் கதவை மூடிக்கொள்கிறது. அங்கே ஆசீர்வாதம் என்பதே இல்லாமல் போகிறது. சண்டை சச்சரவுகளைத் தவிர்த்து வாழும்போது, தேவன் நம் மீது ஆசீர்வாத மழைபெய்யும்படி செய்வார். அதுதான் ஆபிரகாமுடைய வாழ்விலும் நடக்கிறது. லோத்து ஆபிரகாமை விட்டுப்போனவுடனேயே, எல்லாம் ஆபிரகாமுக்குச் சொந்தமானதாக அறிவித்தார்; தேவன் அவருக்கு நண்பரானார்; அவருக்குத் துணையாக தேவன் எப்பொழுதும் எல்லாவற்றிலும் அவரோடு இருந்தார். ஆபிரகாமுடைய பார்வையில் விலைமதிப்பற்றதாகத் தோன்றிய நிலத்தை ஆண்டவர் மிகவும் ஆசீர்வாதமானதாக மாற்றிக் கொடுத்தார். லோத்து தன்னுடைய பார்வையில் செழிப்பான நாட்டை தனக்குச் சொந்தமாக்கிக்கொண்டு, ஆபிரகாமிற்கு செழிப்பான தேசம் கிடைக்கவில்லை என்று நினைத்துக்கொண்டு இருந்தபொழுது, தேவன் ஆபிரகாமோடு இருந்தபடியால், அதை மிகவும் ஆசீர்வாதமுள்ளதாக மாற்றிக்கொடுத்தார். ஆகவே, சண்டை சச்சரவுகளைத் தவிர்க்க, நாம் விட்டுக்கொடுப்பதே சிறந்தது என்று தீர்மானிக்கும்பொழுது தேவன் நம்மை ஆசீர்வதிக்கிறதை நம்மால் அனுபவிக்க முடியும்.

## *சாதுவாக இருப்பது பெலவீனம் அல்ல*

**சங்கீதம் 37:11**

**சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள்.**

சாந்தகுணம் என்பது நமக்குள் மறைந்திருக்கும் ஒரு பலம். ஆகவேதான், *சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்று* வேதாகமம் சொல்கிறது. சாந்தமாக இருக்கிறவர்கள் இந்த பூமியைச் சொந்தமாக்க முடியாதுஎன்றுஒருஞாயிறுவாரஇதழில்எழுதப்பட்டிருந்ததை நான் வாசித்தேன். ஆனாலும், சாந்தகுணமுள்ளவர்கள்

இந்தப் பூமியைச் சொந்தமாக்கிக்கொள்வார்கள் என்று வேதாகமம் சொல்வது முற்றிலும் உண்மை. ஒருவேளை, அதைப் பார்ப்பதற்கு அவர்களுக்கு நீண்ட ஆயுள் இல்லாமல் போகலாம். ஆனால், தேவனுடைய வார்த்தை ஒருநாளும் பொய்சொல்லாது. ஆகவே, சாந்தகுணமுள்ளவர்கள் இந்த பூமியைச் சொந்தமாக்குவது நிச்சயம் நடக்கும்.

## *உடனடியாக சமாதானமாகுங்கள்*

**மத்தேயு 5:9,25,26**

**9 சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.**

**25 எதிராளி உன்னை நியாயாதிபதியினிடத்தில் ஒப்புக்கொடாமலும், நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக்கொடாமலும், நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலும் இருக்கும்படியாக, நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும்போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம்பொருந்து.**

**26 பொருந்தாவிட்டால், நீ ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத் தீர்க்குமட்டும் அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாய் என்று, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.**

**எபிரேயர் 12:14**

**யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.**

**ரோமர் 12:18**

**கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்.**

நம்முடைய எதிராளிகள் நம்மை நியாயவிசாரணைக்குக் கூட்டிக்கொண்டுபோய், நமக்குத் தண்டனை வாங்கிக்கொடுப்பதற்கு முன்பாகவே, நாம் அவரிடம் சமாதானமாகிவிட வேண்டும் என்று வேதாகமம் சொல்கிறது. நாம் எப்பொழுதுமே விட்டுக்கொடுக்கிறவர்களாக, சமாதானம் பண்ணுகிறவர்களாக, பிடிவாதம் பிடிக்காதவர்களாக இருக்க வேண்டும். சண்டை

சச்சரவுகளுக்கு விலகி வாழ வேண்டுமானால், விட்டுக்கொடுத்து வாழ்வதே நல்லது என்ற நோக்கத்தோடு நீங்கள் வாழும்பொழுது, நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய ஆசீர்வாதங்கள் தொடர்வது நிச்சயம். சண்டை சச்சரவுகளைத் தவிர்க்க, நாம் விட்டுக்கொடுப்பதால் ஏற்படும் நஷ்டங்களைவிட பலமடங்கு ஆசீர்வாதங்களை தேவன் நமக்குத் தருவார்.

## மற்றவர்களது தவறை மனதில் வைக்காதீர்கள்

மற்றவர்கள் செய்த தவறை மனதில் வைக்காதீர்கள். உதாரணத்திற்கு, நீங்கள் ஒருவரோடு சாதாரணமாகப் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, நீங்கள் 25 "வருஷங்களுக்கு" முன்பு செய்த குற்றத்தைச் சொல்லி உங்களைக் குத்திக்காட்டலாம். நீங்கள் அதை எப்பொழுதோ மறந்துபோயிருக்கலாம், ஆனால், அவர் அதை இன்றுவரை மறக்கவில்லை. நீங்கள் குற்றம்செய்த அந்த நாளை மாத்திரம் அல்ல, அது நடந்த நேரம், என்னென்ன நடந்தது என்ற முழு பட்டியலையும் ஒப்புவிக்கலாம்.

*“அன்பு, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது”* (1 கொரிந்தியர் 13:5) என்று வேதாகமம் சொல்கிறது. ஒருவர் மீது அன்பு இருந்தால், அவர் இத்தனை குற்றங்கள் செய்தார், இத்தனை தவறுகள் செய்தார் என்று தவறுகளைப் பட்டியல் போட்டு வைக்க மாட்டோம். ஆகவே, சண்டை சச்சரவுகள் இல்லாத வாழ்க்கை வாழ நினைத்தால், நம் மனதில் பதிந்துள்ள மற்றவர்களுடைய குறைகளின் பட்டியலை தினமும், முற்றிலும் அழித்துவிட வேண்டும். நமக்கு எதிராக மற்றவர்கள் செய்த தவறுகளின் எண்ணங்கள் நம் மனதிலிருந்து முற்றிலும் மறைந்துபோக வேண்டும். அப்பொழுதுதான், சண்டை சச்சரவுகள் இல்லாத வாழ்க்கையை நாம் வாழ முடியும்.

**நீதிமொழிகள் 17:9**
**குற்றத்தை மூடுகிறவன் சிநேகத்தை நாடுகிறான்; கேட்டதைச் சொல்லுகிறவன் பிராணசிநேகிதரையும் பிரித்துவிடுகிறான்.**

## *தாராளமாக மன்னியுங்கள், உடனடியாக மன்னியுங்கள்*

**மத்தேயு 5:23,24**
**23 ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில்,**
**24 அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து,**

கடந்த காலத்தில் நிகழ்ந்தவைகளை நாம் திரும்பத்திரும்ப சொல்லும்பொழுது, நாம் உறவுகளை இழக்கிறோம், அழிக்கிறோம். கடந்த காலத்தில் நடந்தவைகளை மறந்து, விட்டுவிட்டாவிட்டால், நட்புடன் உள்ள உறவுகள் அழிவது உறுதி. ஒருவர் நமக்கு விரோதமாகச் செய்த குற்றங்களை நாம் மூடிமறைப்பதால், அன்பை வெளிப்படுத்துகிறோம். நாம் தாராளமாகவும் உடனடியாகவும் மன்னிக்கப் பழக வேண்டும். நாம் தேவனிடத்தில் ஜெபிக்கச் செல்வதற்கு முன்பு, யாரைப்பற்றியாவது, நம் மனதில் குறை இருக்குமானால், முதலாவது அதைச் சரிசெய்துவிட்டு, பின்பு தேவனிடத்தில் வேண்டுதல் செய்யவேண்டும் என்று இயேசு சொல்கிறார். ஆகவே, ஒரு பிரச்சனை ஏற்பட்டவுடனேயே, நாம் அதைச் சரிசெய்து சமாதானமாகிவிட்டால், நம்மால் தேவனிடத்தில் எப்பொழுதும் வேண்டுதல் செய்ய முடியும். இதனுடைய அர்த்தம் என்னவென்றால், இவ்வாறாக இருவருக்கிடையே ஏற்பட்ட பிரச்சனைகளை உடனுக்குடன் பேசி, சமாதானமாகாவிட்டால், தேவனிடத்தில் வேண்டுதல் செய்வதற்கு முன்பு, நாம் அநேகரிடம் அங்குமிங்கும் ஓடி, மன்னிப்புக்கேட்டு சமாதானம் ஆகவேண்டிய

சூழ்நிலைக்குத் தள்ளப்படுவோம். ஆகவே, நமக்கும் இன்னொருவருக்குமிடையே பிரச்சனை ஏற்பட்டால், அதை உடனே பேசி, வருத்தம் தெரிவித்தோ, மன்னித்தோ, மறந்தோ, நம் மனதில் கறைபடியாதபடி, அழித்துத் துடைத்துவிட வேண்டும். அப்படிச் செய்தால், நாம் எந்த நேரத்திலும் ஜெபிக்க ஆயத்தமாக இருக்கலாம். *“பேதுரு அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்துவந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும்? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான். அதற்கு இயேசு: ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபதுதரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்”* (மத்தேயு 18:21,22).

இயேசுவால் மிகவும் நேசிக்கபட்ட சீஷன் என்று பெயர் பெற்ற யோவான்தான் பேதுருவுக்கு அவ்வாறு அடிக்கடி தொல்லைகொடுத்திருக்கலாம், பேதுரு அவனுடைய பெயரைச் சொல்லாமல், இயேசுவிடம் வந்து, “ஒருவன் இப்படி எனக்கு அடிக்கடி தொந்தரவு கொடுத்தால் நான் அவனை எத்தனைமுறை மன்னிக்கலாம்? ஏழுமுறை மன்னித்தால் போதுமா?” என்று கேட்கிறார். அதற்கு இயேசு, “ஏழு எழுபது முறை மன்னிக்க வேண்டும்” என்கிறார். அதனுடைய அர்த்தம் என்னவென்றால், நீ எத்தனை முறை என்று கணக்குப்பார்க்காமல், தாராளமாக மன்னிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். ஆகவே, ஒருவர் செய்த தவறுகள் குற்றங்களை பட்டியல்போட்டு வைக்காமல் இருந்தால், நாம் அவர்களோடு சண்டை சச்சரவுகள் இல்லாமல் வாழும் வாழ்க்கை உறுதியாகக் கிடைக்கும். ஏனெனில், எல்லாமே மன்னிக்கப்பட்டுவிட்டன!

## அசுத்த ஆவிகளின் செயல்களைக் கட்டுங்கள்

**எபேசியர் 6:12**

**ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின்**

**அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.**

சண்டைகளும் குழப்பங்களும் அசுத்த ஆவிகளின் செயல்களால், ஏற்படலாம். அநேக நேரங்களில், சண்டை சச்சரவுகளுக்கு நாம் காரணமாக இருந்தபோதிலும், அசுத்த ஆவிகளின் ஈடுபாடுகளாலும் நமக்கிடையே சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன. எப்படியெனில், நாமும் தவறு செய்திருக்கமாட்டோம்; மற்றவர்களும் எந்தத் தவறும் செய்திருக்க மாட்டார்கள்; இருந்தபோதிலும், நமக்கிடையே தீராத சண்டை சச்சரவுகள் காணப்படும். நாம் எதிர்பார்த்த அளவுக்கு நம்மால் சமாதானமாக வாழ முடியாத ஒரு சூழ்நிலை நிலவும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருந்தால், அது நிச்சயம் அசுத்த ஆவிகளால் நம் உறவு அழிய திட்டமிடப்பட்ட செயலாக இருக்கும். சண்டைகளின் ஆவிகள் நம் உறவுகளை அழிக்க செயல்பட்டுக்கொண்டிருக்கும். இங்கேதான், தேவன் நமக்குக் கொடுத்த அதிகாரத்தையும், ஆவியின் பட்டயமாகிய வசனங்களையும் நாம் பயன்படுத்த வேண்டும். நாங்கள் தேவனுக்குரியவர்கள்! தேவனுடைய ஆளுகையில் வாழ்கிறவர்கள்! அவருடைய நீதி, சமாதானம், சந்தோஷத்தில் வாழ்கிறவர்கள் என்று நாம் தேவனுடைய வசனங்களை அறிக்கையிட்டு, சண்டையைத் தூண்டிவிடும் ஆவிகளை விரட்டி ஜெயிக்க வேண்டும். “நாங்கள் சண்டைகளையோ, பிரிவினைகளையோ எங்கள் உறவுகளுக்குள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்” என்று எப்பொழுதும் அறிக்கையிட்டு வெற்றி பெறவேண்டும். இவ்வாறாக, தேவன் நமக்குக் கொடுத்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, சண்டையைத் தூண்டும் ஆவிகளை நம் உறவுகளிடமிருந்து விரட்ட வேண்டும்! சமாதானத்தைக் காத்துக்கொள்ள நாம் இதைச் செய்ய வேண்டும்.

## சவால்கள்

### *தனிநபருக்கு உள்ள சவால்கள்*

ரோமர் **13:12-14**

**12 இரவு சென்றுபோயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம்.**
**13 களியாட்டும் வெறியும், வேசித்தனமும் காமவிகாரமும், வாக்குவாதமும், பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல், பகலிலே நடக்கிறவர்கள்போலச் சீராய் நடக்கக்கடவோம்.**
**14 துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்.**

தனிநபர்களாக, நாம் சண்டை சச்சரவுகள் இல்லாமல் வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம். பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம். அதை நாம் எப்படிச் செய்வது? நாம் சீராய் நடக்க வேண்டும் என்று வேதாகமம் சொல்கிறது. சீராய் நடப்பது என்றால் என்ன? பகலில் நடக்கிறவர்களைப் போல நடந்து, இருளின் ஆதிக்கமாகிய சண்டை சச்சரவுகளுக்கு நாம் விலகி இருக்க வேண்டும். நாம் இருளுக்கு உரியவர்கள் அல்ல; மாறாக, வெளிச்சத்துக்கு உரியவர்கள். அப்படியானால், நாம் கண்ணியமாக வாழ்ந்து இயேசுவைத் தரித்துக்கொள்ள வேண்டும். நாம் அனைவருமே சண்டை சச்சரவுகள் இல்லாத வாழ்க்கை வாழத் தீர்மானிக்க வேண்டும். நம்முடைய நண்பர்கள், பக்கத்து வீட்டார்கள், நம்மோடு சேர்ந்து வாழ்கிறவர்கள் என்று அநேகரோடு நாம் சண்டைபோடும் சூழ்நிலைகள் பல ஏற்படலாம். உதாரணத்திற்கு, நமது பக்கத்து வீட்டுக்காரர்கள் ஒலிபெருக்கியில் பாடலைச் சத்தமாக வைத்துக் கேட்கும்பொழுது, நாம் அதைவிட அதிக ஒலியை நம் ஒலிபெருக்கியில் கூட்டலாம். ஆனால், அவ்வாறாகச் செய்யாமல், அவர்களோடு சண்டையில்லாமல் வாழத் தீர்மானிக்க வேண்டும்.

இதுவே நம் அனைவருக்குமான சவால்! “என்ன நடந்தாலும் சரி, என்ன விலைகொடுக்க நேர்ந்தாலும் சரி, மற்றவர்கள் என்னைப் பற்றி என்ன நினைத்தாலும் சரி, என்ன செய்தாலும் சரி, சண்டைபோடுவதற்கு எத்தனை சூழ்நிலைகள் வந்தாலும் சரி, நாம் இனிமேல் சண்டையில்லாத வாழ்க்கை வாழப் போகிறோம்” என்று நமக்கு நாமே சொல்ல வேண்டும்.

## *சபையாருக்கு உள்ள சவால்கள்*

**சங்கீதம் 133:1-3**

**1 இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?**

**2 அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும்,**

**3 எர்மோன்மேலும், சீயோன் பர்வதங்கள்மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது; அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்.**

நம்முடைய திருச்சபையிலும் சண்டை சச்சரவுகள் இல்லாத ஐக்கியம் வேண்டும். எந்த ஐக்கியத்தில் முற்றிலும் சண்டை சச்சரவுகள் இல்லாமல் இருக்கிறதோ, அங்கே தேவனுடைய அபிஷேகத்தையும், தேவனுடைய பிரசன்னத்தையும் அனுபவிக்க முடியும். பனிபெய்வதுபோல, நம்மீது தேவனுடைய ஜீவனும், ஆசீர்வாதமும், சமாதானமும் இரங்கும். அப்படிப்பட்ட ஆராதனையை தெரிந்தெடுக்கும் வாய்ப்பு நம்கையில்தான் இருக்கிறது. நாம் அனைவரும் அன்புடனும், சமாதானத்துடனும், சண்டை சச்சரவுகள் இல்லாமல் இணக்கமாகவும் வாழ்கிறவர்களாகிய இயேசுவுடைய சரீரமாகிய சபை என்பதை உறுதி செய்ய வேண்டும். சண்டை சச்சரவுகள் இல்லாத வாழ்க்கை எவ்வளவு முக்கியம் என்பதை நாம் அனைவருமே புரிந்துகொள்ள வேண்டும். ஏதாவது ஒரு பிரச்சனை ஏற்பட்டால், நாம் அதை உடனடியாகப் பேசித் தீர்த்து, மன்னித்து மறந்துவிட

வேண்டும். அதைத் திரும்பவும் செய்யக்கூடாது. நமக்கு மற்றவர்கள் செய்த நன்மைகள் மற்றும் சாதனைகளை மாத்திரம் மனதில் வைக்க வேண்டும். தோல்விகள் மற்றும் எதிர்மறையானவைகளை மறந்துவிட வேண்டும். மக்கள் செய்த தவறுகளை மறந்து, அவைகள் நம் மனதிலிருந்து அழிக்கப்பட வேண்டும். ஏனெனில், நாம் செய்த பாவங்களை அவர் கடலின் ஆழத்தில் போட்டுவிட்டு, மறந்துவிடுகிறார் என்று வேதாகமம் சொல்கிறது. ஆண்டவரே அதை மன்னித்து மறந்துவிடும்பொழுது, நாம் ஏன் அவைகளை நம் மனதில் சுமந்து, மனஅழுத்தங்களை அனுபவிக்க வேண்டும். மாறாக, நல்லவைகளைச் சுமக்க நம் மனதில் இடங்கொடுப்போமாக.

# மனந்திரும்புதலின் ஜெபம்

- நம்மில் சிலர் சண்டை உணர்வுகளால் தூண்டப்பட்டு சில செயல்களைச் செய்கிறோம். ஆனால், நம்மால் அதை மாற்றிக்கொள்ள முடியும்.

"ஆண்டவரே! நான் உமது பிரசன்னத்தில் நிற்கிறேன், என் இருதயத்தைத் தாழ்த்துகிறேன். நான் செய்கிற சில செயல்கள் சண்டையிடும் நோக்கத்தில் இருப்பதை உணர்கிறேன்! ஆனால், நான் அதை மாற்றிக்கொள்ள விரும்புகிறேன்!" என்று ஜெபியுங்கள்.

- நாம் பேசுகிற பேச்சுகள் மற்றவர்கள் மனதை நோகடிக்கிறதுஎன்றஉணர்வுஇல்லாமல்,வார்த்தைகளில் கவனமில்லாமல் பேசுகிறவர்கள், உறவுகளையும் நட்புகளையும் இழந்துகொண்டிருக்கிறவர்கள்,

*"தேவனே! நான் பேசுகிற வார்த்தைகளை கவனமாகப் பேச எனக்கு உதவி செய்வீராக" என்று ஜெபம் செய்யுங்கள்.*

- நம்மில் சிலர், கட்டுப்பாட்டை இழந்து எளிதில் கோபப்படுகிறவர்களாக இருப்போம். ஆனால், தங்களுடைய கோபத்தைக் கட்டுப்படுத்துகிறவர்கள், ஒரு நகரத்தை பிடிக்கிறவர்களைவிட பலசாலி என்று வேதாகமம் சொல்கிறது.

*"ஆண்டவரே! பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு, என் கோப உணர்வுகளை என்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வைக்க எனக்குக் கிருபை தாரும். அவமானங்களைப் பொருட்படுத்தாமல் இருக்க பெலன் தாரும், நான் எதிர்மறையாக செயல்படாத வரையில், அது என்னை மாற்றப்போவதில்லை! கர்த்தாவே, மற்றவர்கள் என்னிடம்*

*கடினமாகப் பேசினாலும், நான் அவர்களுக்கு சாந்தமாக பதில் சொல்ல எனக்குக் கிருபை தாரும். என் பிடிவாத குணம் சண்டை சச்சரவுகளுக்குக் காரணமாக இருப்பதால், விட்டுக்கொடுக்கவும் அதை விட்டுவிடவும் எனக்கு கிருபை தாரும். ஆண்டவரே, சண்டை சச்சரவுகளுக்கு நான் நீங்கி வாழும்பொழுது, உமது ஆசீர்வாதம் நிச்சயம் எனக்குக் கிடைக்கும். முற்றிலும் சண்டை சச்சரவுகளே இல்லாத வாழ்க்கை வாழும்படியாக எனக்கு ஒரு வாய்ப்பைத் தாரும்!" என்று கர்த்தரிடத்தில் ஜெபம் செய்யுங்கள்.*

- நம்மில் சிலர், மற்றவர்கள் நமக்குச் செய்த தீமைகளை நம் மனதில் பட்டியலிட்டு வைத்திருப்போம். அப்படிப்பட்டவர்கள்,

*"கர்த்தாவே! மற்றவர்கள் செய்த குற்றங்களை எல்லாம் என் மனதிலிருந்து அழித்து, என் மனதைச் சுத்தமாக்கி, அவற்றை மறந்துவிட எனக்கு உதவி செய்வீராக" என்று தேவனிடத்தில் ஜெபியுங்கள்.*

- கணவன்மார்களே, மனைவிமார்களே! எல்லா திருமணத்திலும் சண்டைகளும் முரண்பாடுகளும் இருக்க அதிக வாய்ப்புகள் உள்ளன. ஆனால், ஒவ்வொரு நாளும் முடிவடையும்பொழுது, உங்களது இருதயத்திலும் உங்களது துணையின் இருதயத்திலும் உள்ள வருத்தங்களைக் களைந்து போட்டு, அவற்றை மனதில் வைத்திராமல், இருதயத்தை சுத்தமாக வைத்திருப்போம் என்று ஒருவருக்கொருவர் சொல்ல வேண்டியது நமது கடமையாய் இருக்கிறது.

*"தேவனே எங்களுக்குள் கிரியை செய்து, எங்கள் இருதயங்களில் மாற்றங்களைத் தாரும்" என்று ஜெபியுங்கள்.*

இவ்வாறான மனந்திரும்புதல் மற்றும் ஜெபத்தின் விளைவாக, நீண்டநாட்களாக உறவுகளில் ஏற்பட்டிருந்த

விரிசல் சரிசெய்யப்பட்டு, ஆரோக்கியமாக வாழ முடியும். சமாதானமும், இணக்கமும் மற்றும் நல்ல புரிதலும் நம் இருதயத்தில் மட்டுமல்லாமல், நம்மோடு உறவுகொண்டுள்ளவர்கள் வாழ்விலும் துளிர்க்கும். தேவன் நம் இருதயத்தை மாற்றிவிட்டதால், நம் வாழ்வில் மீட்பு, சமாதானம் மற்றும் சந்தோஷத்தை நாம் பெற்றுக்கொள்ளும்படி, தேவன் செய்திருக்கிற கிரியை சகல உடைந்த உறவுகளையும் தொட்டு சரிசெய்வதாக!

# உன்னை நேசிக்கும் தேவன் யார் என்று உனக்குத் தெரியுமா?

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பு, தேவன் மனுஷனாக இந்த உலகத்திற்கு வந்தார். அவருடைய நாமம் இயேசு என்பதாகும். அவர் முற்றிலும் பாவமில்லாத வாழ்க்கையை வாழ்ந்தார். இயேசு மாம்சத்தில் வந்த தேவனாக இருந்ததால், அவர் சொன்னவைகள் மற்றும் செய்தவைகள் அனைத்துமே தேவனை நமக்கு வெளிப்படுத்தின. அவர் பேசின வார்த்தைகள் யாவும் தேவனுடைய வார்த்தைகளாக இருந்தன. அவர் செய்த காரியங்கள் யாவும் தேவனுடைய செயல்களாக இருந்தன. இயேசு இந்தப் பூமியில் அநேக அற்புதங்களைச் செய்தார். அவர் வியாதியஸ்தர்களையும் வேதனையில் இருந்தவர்களையும் குணப்படுத்தினார். அவர் குருடர்களின் கண்களைத் திறந்தார், செவிடனின் செவிகளைத் திறந்தார், முடவர்களை நடக்கச் செய்தார், மற்றும் சகலவிதமான நோய்களையும் வியாதிகளையும் சுகமாக்கினார். அவர் ஒரு சில அப்பத் துண்டுகளை அற்புதமாகப் பெருகச் செய்ததன் மூலமாக பசியோடிருந்தவர்களை போஷித்தார், கடும்புயலை அடக்கினார், மற்றும் இன்னும் அநேக அற்புதங்களையும் கூட செய்தார்.

**ஜனங்கள் நலமாகவும், சுகமாகவும், ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புவதால், அவர் ஒரு நல்ல தேவன் என்பதை இந்தச் செயல்கள் அனைத்தும் நமக்கு வெளிப்படுத்துகின்றன. தேவன் ஜனங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்புகிறார்.**

அப்படியானால் தேவன் ஏன் மனுஷனாக மாறி நமது உலகத்திற்குள் வரும்படி தீர்மானிக்க வேண்டும்? இயேசு ஏன் வந்தார்?

நாம் எல்லோருமே பாவம் செய்து, நம்மை சிருஷ்டித்த தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளத் தகாத செயல்களைச் செய்துவிட்டோம். பாவத்திற்கான விளைவுகள் நிச்சயம் உண்டு. பாவமானது தேவனுக்கும் நமக்கும் இடையே தாண்டிச் செல்ல முடியாத ஒரு மிகப் பெரிய சுவரைப் போன்றதாக இருக்கிறது. பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது. நம்மை சிருஷ்டித்தவரை அறிந்துகொள்வதிலிருந்தும், ஒரு அர்த்தமுள்ள உறவை அவருடன் ஏற்படுத்திக்கொள்வதிலிருந்தும் அது நம்மைத் தடுக்கிறது. எனவே, நம்மில் பலர் இந்தக் காலியிடத்தை மற்ற

விஷயங்களால் நிரப்ப முயற்சிக்கிறோம்.

நம்முடைய பாவங்களின் மற்றொரு விளைவு, தேவனிடமிருந்து விலகிச் செல்லும் நித்திய பிரிவினையாகும். தேவனுடைய நியாயஸ்தலத்தில், பாவத்திற்கான தண்டனை மரணமாகும். மரணம் என்பது தேவனிடமிருந்து பிரிந்து நரகத்தில் வாழும் நித்திய பிரிவினையாகும்.

ஆனால் நற்செய்தி என்னவென்றால், நம்மால் பாவத்திலிருந்து விடுபட்டு தேவனிடத்திற்குத் திரும்பிவர முடியும் என்பதேயாகும். வேதாகமம் கூறுகிறது, ***"பாவத்தின் சம்பளம் (கூலி) மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்"*** (ரோமர் 6:23). இயேசு சிலுவையில் மரித்தபோது, முழு உலகத்தின் பாவங்களுக்கான விலைக்கிரயத்தையும் செலுத்தினார். மூன்று நாட்களுக்குப் பிறகு, அவர் மறுபடியும் உயிரோடு எழும்பி, பலருக்குத் தம்மை உயிரோடு இருக்கிறவராகக் காட்டினார், பின்பு, மறுபடியும் பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றார்.

தேவன் அன்பும் இரக்கமும் கொண்ட தேவனாக இருக்கிறார். ஒரு நபர் கூட நரகத்தில் அழிந்துபோவதை அவர் விரும்புவதில்லை. ஆகவேதான், பாவத்திலிருந்தும் அதன் நிரந்தர விளைவுகளிலிருந்தும் விடுபடுவதற்கான ஒரு வழியை முழு மனித இனத்திற்கும் அருளுவதற்காக அவர் இறங்கி வந்தார். அவர் பாவிகளை இரட்சிக்க வந்தார் - உங்களைப் போன்றவர்களையும் என்னைப் போன்றவர்களையும் பாவத்திலிருந்தும் நித்திய மரணத்திலிருந்தும் மீட்கவே வந்தார்.

இலவசமாகக் கிடைக்கும் இந்த பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள, நாம் ஒரே ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது - அது என்னவென்றால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்து முடித்ததை ஏற்றுக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடு விசுவாசிக்க வேண்டும் என்பதேயாகும்.

***"... அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்"*** **(அப்போஸ்தலர் 10:43).**

***"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்"*** **(ரோமர் 10:9).**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால், நீங்களும் கூட பாவமன்னிப்பைப் பெற்று சுத்திகரிக்கப்படலாம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவர் உங்களுக்காக சிலுவையில் என்ன செய்திருக்கிறார் என்பதையும் விசுவாசிப்பதற்கு உங்களுக்கு உதவும் ஒரு எளிய ஜெபம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு உங்களுக்காகச் செய்ததை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள் என்பதை வெளிப்படுத்தவும், உங்கள் பாவங்களுக்கான பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு சுத்திகரிக்கப்படவும் இந்த ஜெபம் உங்களுக்கு உதவும். இந்த ஜெபம் உங்களுக்கான ஒரு வழிகாட்டி மட்டுமே. நீங்கள் உங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியும் கூட ஜெபிக்கலாம்.

*அன்புள்ள கர்த்தராகிய இயேசுவே, சிலுவையில் நீர் எனக்காக என்ன செய்திருக்கிறீர் என்பதை இன்று நான் புரிந்துகொண்டேன். நீர் எனக்காக மரித்தீர், உம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தினீர், நான் மன்னிக்கப்படும்படி என் பாவங்களுக்கான தண்டனையை நீர் ஏற்றுக்கொண்டீர். உம்மை விசுவாசிக்கிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்று வேதாகமம் சொல்கிறது.*

*இன்று, நான் உம்மை விசுவாசிக்கவும், எனக்காக சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததன் மூலம் நீர் எனக்காகச் செய்ததை ஏற்றுக்கொள்ளவும் நான் தீர்மானிக்கிறேன். எனது சொந்த நற்கிரியைகளால் நான் என்னை இரட்சித்துக்கொள்ள முடியாது என்பதை அறிவேன், வேறு எந்த மனுஷனும் என்னை இரட்சிக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும். என் பாவங்களுக்கான மன்னிப்பை என்னால் சம்பாதிக்க முடியாது.*

*இன்று, நீர் எனக்காக மரித்தீர், என் பாவங்களுக்கான விலைக்கிரயத்தை செலுத்தினீர், மரித்தோரிலிருந்து மறுபடியும் உயிர்த்தெழுந்தீர் என்றும், உம் மீது வைத்திருக்கிற விசுவாசத்தால், என் பாவங்களுக்கான மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் நான் பெற்றுக்கொள்கிறேன் என்றும் நான் என் உள்ளத்தில் விசுவாசித்து என் வாயினால் அறிக்கையிடுகிறேன்.*

*இயேசுவே உமக்கு நன்றி. உம்மை நேசிக்கவும், உம்மை அதிகமாக அறிந்துகொள்ளவும், உமக்கு உண்மையாக இருக்கவும் எனக்கு உதவி செய்வீராக.*

*ஆமென்.*

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச் பற்றி அறிவோம்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது பெங்களூர் நகரத்துக்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்பதும், இந்த தேசத்துக்கும் இன்னும் நிறைய தேசங்களுக்கும் தேவ சத்தமாக இருக்க வேண்டும் என்பதும்தான் எங்களது தரிசனம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது **இயேசுவை நேசிக்கும், வார்த்தையில் கவனம் செலுத்தும், ஆவியால் நிரப்பப்பட்டிருக்கும் ஒரு திருச்சபையும்,** ஒரு குடும்ப திருச்சபையும், மேம்படுத்தும் மையமும், ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டதும் மற்றும் உலகளாவிய ஊழியத்தை செய்யும் ஒரு திருச்சபையுமாகும்.

- ஒரு **குடும்பத் திருச்சபையாக,** கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஐக்கியத்தில் ஒரு சமூகமாக ஒன்றாக வளர்கிறோம், தேவனுடைய சபையாக ஒருவருக்கொருவர் அன்பாக இருந்து அக்கறையோடு ஊழியம் செய்கிறோம்.
- **மேம்படுத்தும் ஒரு மையமாக,** ஒவ்வொரு விசுவாசியும் வெற்றியுடன் வாழவும், கிறிஸ்துவின் சாயலில் முதிர்ச்சியடையவும், அவர்களின் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றவும் நாங்கள் ஊக்கமளித்து, அவர்களை மேம்படுத்துகிறோம்.
- **ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டவர்களாக,** தேவனுடைய வார்த்தையினாலும் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையுள்ள செயல்களினாலும், இயேசு கிறிஸ்துவின் முழு சுவிசேஷத்தினால் நமது நகரம், தேசம் மற்றும் பிற தேசங்களை ஆசீர்வதிக்க அர்த்தமுள்ள ஊழியத்தில் ஈடுபடுகிறோம்.
- **ஒரு உலகளாவிய ஊழியமாக,** தேவனுடைய ராஜ்யத்திற்காகத் தங்கள் பிராந்தியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தெய்வீகத் தலைவர்கள் மற்றும் ஆவியானவரால் வழிநடத்தப்படும் திருச்சபைகளை வளர்ப்பதன் மூலம் உள்நாட்டிலும் உலக அளவிலும் நாங்கள் ஊழியம் செய்கிறோம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் நடத்துதலில் தேவனுடைய வார்த்தையை முழுமையாகவும், சமரசம் செய்யாமலும் முன்வைக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நல்ல இசை, ஆக்கப்பூர்வமான விளக்கக்காட்சிகள், தேர்ந்த வேத தர்க்கவியலாலர்கள், இன்றைய காலத்து ஏற்ற ஊழிய முறைகள், நவீன தொழில்நுட்பம் போன்றவைகள், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும் முறைக்கும் பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள், அதிசயங்கள், அற்புதங்கள் மற்றும் வரங்களுக்கும் ஒருபோதும் ஈடாகாது என்று நாங்கள்

நம்புகிறோம் (1 கொரிந்தியர் 2:4,5; எபிரேயர் 2:3,4). எங்கள் கருப்பொருள் இயேசு, எங்கள் உள்ளடக்கம் வார்த்தை, எங்கள் முறை பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, எங்கள் தாகம் மக்கள் மற்றும் எங்கள் குறிக்கோள் கிறிஸ்துவைப் போல முதிர்ச்சியடைதலாகும்.

பெங்களூரை மையமாகக் கொண்டு செயல்படும் எங்களது ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது, இந்தியாவில் பல இடங்களில் திருச்சபையைக் கொண்டுள்ளது. ஆல் பீப்பிள்ஸ் சர்ச் இருப்பிடங்களின் தற்போதைய பட்டியலையும் தொடர்புக்கான தகவலையும் பெற, **apcwo.org/locations** ல் உள்ள எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது **contact@apcwo.org** க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

# இலவச வெளியீடுகள்

A Church in Revival
A Real Place Called Heaven
A Time for Every Purpose
Ancient Landmarks
Baptism in the Holy Spirit
Being Spiritually Minded and Earthly Wise
Biblical Attitude Towards Work
Breaking Personal and Generational Bondages
Change
Code of Honor
Divine Favor
Divine Order in the Citywide Church
Don't Compromise Your Calling
Don't Lose Hope
Equipping the Saints
Foundations (Track 1)
Fulfilling God's Purpose for Your Life
Gifts of the Holy Spirit
Giving Birth to the Purposes of God
God Is a Good God
God's Word—The Miracle Seed
How to Help Your Pastor
Integrity
Kingdom Builders
Laying the Axe to the Root
Living Life Without Strife
Marriage and Family
Ministering Healing and Deliverance
Offenses—Don't Take Them
Open Heavens
Our Redemption
Receiving God's Guidance
Revivals, Visitations and Moves of God
Shhh! No Gossip!
Speak Your Faith
The Conquest of the Mind
The Father's Love
The House of God
The Kingdom of God
The Mighty Name of Jesus
The Night Seasons of Life
The Power of Commitment
The Presence of God
The Redemptive Heart of God
The Refiner's Fire
The Spirit of Wisdom, Revelation and Power
The Wonderful Benefits of Praying in Tongues
Timeless Principles for the Workplace
Understanding the Prophetic
Water Baptism
We Are Different
Who We Are in Christ
Women in the Workplace
Work—Its Original Design

புதியபுத்தகங்கள்தொடர்ந்துவெளியிடப்படுகின்றன.PDF,ஆடியோ மற்றும் பிற வடிவங்களில் இலவசமாக ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் கிறிஸ்தவ புத்தகங்களைப் பதிவிறக்கம் செய்ய **apcwo.org/books** என்ற வலைதளத்தைப் பார்வையிடவும். இவற்றில் பல புத்தகங்கள் பிற மொழிகளிலும் கிடைக்கின்றன. இலவச ஆடியோ மற்றும் வீடியோ பிரசங்கங்கள், பிரசங்க குறிப்புகள் மற்றும் பல இலவச ஆதாரங்களுக்கு **apcwo.org/sermons** என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.

# கிறிசாலிஸ் ஆலோசனை மையம்

வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளவும், அவற்றைக் கடக்கவும் மக்களுக்கு உதவ, கிறிசாலிஸ் ஆலோசனை மையமானது தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குகிறது. கிறிசாலிஸ் கவுன்சிலிங் என்பது தொழில்ரீதியாக பயிற்சி பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த கிறிஸ்தவ ஆலோசகர்களின் குழுவாகும்.

எங்கள் சேவைகள் எல்லா வயதினருக்குமானவை மற்றும் இது வாழ்க்கையின் பல்வேறு சவால்களைத் தீர்த்துவைக்கின்றன.

**இளம் பிராய நடத்தை**

**பிறரோடு இணைக்கக் குறைபாடு**

**உறவுமுறை சவால்கள்**

**கல்வியில் பின்தங்கிய நிலை**

**தொழில் தொடர்பான பிரச்சினைகள்**

**குடும்பம் / தம்பதிகள்: திருமணத்திற்கு முன், திருமணத்திற்குப் பின்**

**பெற்றோர் / குழந்தைகள் / உடன்பிறந்தவர்கள் / சக வயதினர்**

**நடத்தையில் சீர்கேடு**

**ஆளுமை குறைபாடு**

**உளவியல் / உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்**

**மன அழுத்தம் / திடீர் அதிர்ச்சி**

**மது / போதைப்பொருளுக்கு அடிமை**

**ஆவிக்குரிய போராட்டங்கள்**

**வாழ்வியல் முன்னேற்ற ஆலோசனை**

கிரிசாலிஸ் ஆலோசனை சேவைகளுக்கான கட்டணங்கள் குறைவானதாகவும் சுலபமாக செலுத்தக்கூடியதாகவும் இருக்கிறது.

எங்களிடம் உள்ள கைதேர்ந்த ஆலோசகர்களில் ஒருவருடன் சந்திப்பைத் திட்டமிட கீழ்க்கண்ட வழிமுறைகளில் அணுகவும்:

**வலைதளம்: chrysalislife.org**
**தொலைபேசி:** +91-80-25452617 அல்லது கட்டணமில்லா அழைப்பு (இந்தியாவிற்குள்) 1-800-300-00998
**மின்னஞ்சல்: counselor@chrysalislife.org**

கிறிசாலிஸ் ஆலோசனை என்பது ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட்ரீச் செய்யும் ஊழியமாகும்.

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பங்குதாரராக இருத்தல்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் ஊழியர்கள், ஒரு உள்ளூர் திருச்சபையாக தன் சொந்த எல்லைகளுக்கு அப்பால், இந்தியா முழுவதும், குறிப்பாக வட இந்தியா முழுவதும் ஊழியம் செய்வது மட்டுமல்லாமல், (அ) தலைவர்களைப் பெலப்படுத்துதல், (ஆ) இளைஞர்களை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்துதல் மற்றும் (இ) கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்துகின்றனர். இளைஞர்களுக்கான பல பயிற்சிக்கூடங்கள் மற்றும் 'கிறிஸ்தவ தலைவர்களுக்கான கருத்தரங்குகள்' ஆண்டு முழுவதும் நடத்தப்படுகின்றன. மேலும், வார்த்தையிலும் ஆவியிலும் விசுவாசிகளை ஆயத்தப்படுத்தும் நோக்கத்துடன் ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் புத்தக வெளியீடுகளின் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

ஒரு முறை தரும் நிதியாகவோ அல்லது மாதாந்திர நிதியாகவோ அனுப்புவதன் மூலம் எங்களுடன் நிதி ரீதியாக பங்குதாரராக இருக்க உங்களை அழைக்கிறோம். நமது நாடு முழுவதும் செய்யப்படும் இந்த ஊழியத்திற்காக எங்களுக்கு உதவ நீங்கள் அனுப்பும் எந்தத் தொகையும் பெரிதும் பாராட்டப்படும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய பரிசுத் தொகையை "ஆல் பீப்பிள்ஸ் சர்ச்"க்கு காசோலை / வங்கி வரையோலை மூலம் எங்கள் அலுவலக முகவரிக்கு அனுப்பலாம். இல்லையெனில், எங்களின் வங்கிக் கணக்கு விவரங்களைப் பயன்படுத்தி வங்கிப் பரிவர்த்தனை மூலம் உங்கள் பங்களிப்பை நேரடியாக அனுப்பலாம்.

**வங்கிக் கணக்கின் பெயர்:** All Peoples Church
**வங்கிக் கணக்கு எண்:** 50200068829058
**IFSC குறியீடு:** HDFC0004367
**வங்கியின் பெயர்:** HDFC வங்கி, 7M/308 80 Ft Rd, HRBR லேஅவுட், கல்யாண் நகர், பெங்களூரு, கர்நாடகா 560043

***கவனத்தில் கொள்ளவும்:*** *ஆல் பீப்பிள்ஸ் சர்ச் இந்தியா சார்ந்த வங்கிக் கணக்கிலிருந்து மட்டுமே வங்கி பங்களிப்புகளை ஏற்கிறது. உங்கள் பங்களிப்பைச் செய்யும்போது, விரும்பினால், உங்கள் பங்களிப்பைப் பயன்படுத்த விரும்பும் குறிப்பிட்ட ஆல் பீப்பிள்ஸ் சர்ச் ஊழியப் பகுதியைக் குறிப்பிடலாம். கூடுதல் விவரங்களுக்கு,* ***apcwo.org/give*** *என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.*

மேலும், உங்களால் முடிந்த போதெல்லாம் எங்களுக்காகவும் எங்கள் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க மறவாதீர்கள்.

**நன்றி, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!**


## DOWNLOAD THE FREE APP!

*Search for*

"All Peoples Church Bangalore"
in the App or Google play stores.

Available on the App Store

ANDROID APP ON Google play




*A daily 5-minute video devotional.*
*A daily Bible reading and prayer guide.*
*5-minute Sermon summary.*
*Toolkit with Scriptures on various topics to build faith and information to share the Gospel.*
*Resources with sermons, sermon notes, TV programs, books, music and more.*

*IF YOU LOVE IT, TELL OTHERS ABOUT IT!*

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரி

**apcbiblecollege.org**

இந்தியாவின் பெங்களூரில் உள்ள ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரி மற்றும் ஊழியப் பயிற்சி மையமானது, உபதேச ரீதியாக சிறந்த மற்றும் அறிவார்ந்த ஊக்கமளிக்கும் தேவனுடைய வார்த்தையின் படிப்போடு கூட, ஆவியானவரால் நிரப்பப்பட்டு, அபிஷேகம் செய்யப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையில் ஊழியம் செய்வதற்கு ஆயத்தப்படுத்தவல்ல பயிற்சியை வழங்குகிறது. தேவனுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்றியிருக்கும் தேவனுக்கேற்ற குணநலன்களோடு, அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களால் வல்லமையான செயல்களை ஊழியத்தில் நடத்திக்காட்டும் ஒரு பூரண மனுஷனை எங்களால் உருவாக்க இயலும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரியில் (APC-BC), ஆரோக்கியமான போதனையோடு, தேவனுடைய அன்பை வெளிக்காட்டுவதையும், அபிஷேகம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தையும் மற்றும் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியையையும் வலியுறுத்துகிறோம். பல இளைஞர்களும் வாலிப வயதின் பெண்களும் தங்கள் வாழ்க்கையின் மீதான தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவதற்காக பயிற்சியளிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

நாங்கள் மூன்று பாட திட்டங்களை வழங்குகிறோம்.

- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - ஒரு வருட படிப்பு சான்றிதழ் (C.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - இரண்டு வருட டிப்ளமோ படிப்பு (Dip.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - மூன்று வருட இளங்கலை படிப்பு (B.Th.)

ஒவ்வொரு வார நாட்களிலும், திங்கள் முதல் வெள்ளி வரை, இந்திய நேரப்படி காலை 9:00 முதல் நண்பகல் 12 மணி வரை (UTC+5:30) வகுப்புகள் நடைபெறும். நாங்கள் மூன்று வழியில் கற்பதற்கான விருப்பத் தேர்வுகளை வழங்குகிறோம்.

- **வளாகத்தில் கற்றல்:** வளாகத்தில் நேரடியாக வகுப்புகளில் கலந்து கொள்ளுதல்
- **இணைய வழியில் கற்றல்:** ஆன்லைனில் நேரடி விரிவுரைகளில் கலந்து கொள்ளுதல்
- **மின்னஞ்சல் வழியாக கற்றல்: apcbiblecollege.org/elearn** ஆன்லைன் செயலி மூலம் தானாகக் கற்றுக்கொள்ளுதல்

**இணைய வழியில் விண்ணப்பிக்கவும்,** மற்றும் கல்லூரி, பாடத்திட்டம், படிப்புக்கான தகுதி, கல்விச் செலவுகள் பற்றிய கூடுதல் தகவலுக்கும் மற்றும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யவும், தயவுசெய்து **apcbiblecollege.org** என்ற இணையதளத்திற்குச் செல்லவும்.

குடும்பத்திலும், வேலை செய்கிற இடங்களிலும், ஊழியத்திலும், சபையிலும் மற்றும் எல்லா இடங்களிலும் சண்டை சச்சரவுகளோடான வாழ்க்கை உறவுகளை நாசம்பண்ணுகிறது. புற்றுநோய் பரவுவதுபோல, எல்லா இடங்களிலும் சண்டை சச்சரவுகள் பரவி, சண்டை சச்சரவுகள் இல்லாத இடமே இல்லை என்ற நிலை காணப்படுகிறது.

அப்படியானால், சண்டை சச்சரவுகள் என்றால் என்ன? சண்டை சச்சரவுகள் என்பது மக்களுக்கிடையே ஏற்படும் பிரிவினைகள், வெறுப்புக்கள், பகை விரோதங்கள் மற்றும் போராட்டங்களாகும்.

இதுபோன்ற சண்டை சச்சரவுகளுக்கு எது காரணமாக இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டு, சண்டை சச்சரவுகளோடு வாழ்வதால் நம் வாழ்வில் ஏற்படும் எதிர்மறைத் தாக்கங்களை கண்டறிந்து, நம் வாழ்வில் சண்டை சச்சரவுகளைத் தவிர்த்து வாழ்வதற்கான வழிமுறைகளை நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதே இந்தப் புத்தகத்தை எழுதுவதன் நோக்கமாகும்.




All Peoples Church & World Outreach
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: contact@apcwo.org
Website: apcwo.org